# அர்ச்சுனா


கல்வி — முயற்சி — பெருவாழ்வு

1987
பெப்ரவரி




இளவல்கள் அறிவமுதத் திங்கள் இதழ்






ஆவணக் காப்பகம்


# அர்ச்சுனு

கல்வி-முயற்சி-பெருவாழ்வு


நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
— பாரதி


தனு: 1 கணை: 2

விலை ரூபா: 3-00

அர்ச்சுனு
பெப்ரவரி - 1987


# உங்களோடு ஒரு கணம்

**அன்பார்ந்த இளவல்களே!**

பாடசாலைகள் தொடங்கி ஒரு மாதம் கடந்துவிட்டது. இந்த வருடத்திற்கு உரிய பாடத் திட்டத்தில் பன்னிரண்டில் ஒரு பகுதியை இதுவரை நீங்கள் படித்து முடித்திருக்க வேண்டும்.

அது உங்களில் எத்தனை பேருக்குச் சாத்தியமாயிற்று என்பது கேள்விக்குரிய விடயமே. தமிழ்ப் பகுதிகளுக்கு பாடநூல்கள் முழுமையாக வந்து சேரவில்லை என்பதே அந்தக் கேள்வி எழக் காரணம். உரிய நேரத்தில் பாட நூல்கள் கிடைக்காமை தமிழ்ப்பகுதிகளில் வருடாந்த நடைமுறையாகிவிட்டது.

தமிழ் மாணவர்களாகிய உங்களுக்கு கல்வியைப் பெறுவதில் உள்ள கஷ்டங்கள் அனந்தம். இது ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் அறிந்த உண்மை.

பாடசாலைகளே ஒழுங்காக சீராக இயங்கமுடியாமல் பல புறக்காரணிகள் சூழ்ந்து தடுக்கின்றன.

இத்தகைய இக்கட்டான சந்தர்ப்பத்திலும், தமிழ் மாணவர்கள் சாதனைகளை நிலைநாட்டி வருவது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

தமிழர்களின் கல்விப் பாரம்பரியமும், திறமையும், சிறப்புடையன. அவை மழுங்கடிக்கப்படாமல் மாணவர்கள் இந்தச் சோதனை மிகுந்த வேளையிலும், அக்கறையுடன் பயின்று கல்வித் துறையில் முன்னணியில் திகழ்வதைப் பாராட்டுகிறோம்.

சென்ற வருடம் நடைபெற்ற ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில், அகில இலங்கையிலும் முதற்பரிசு மூன்றும் பரிசுகளைப் பெற்ற தமிழ் மாணவர்களை 'அர்ச்சுனு'' பாராட்டுகிறான். சபாஷ்! என்று தட்டிக் கொடுக்கிறான். சாதனை நிலைநாட்டிய மாணவர்களதும், பாடசாலைகளினதும் விபரங்களை உள்ளே படியுங்கள்.

அவர்களைப் பார்த்து மற்றவர்களும் கல்வித்துறையில் சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக திறமைசாலி மாணவர்களின் படங்களை "அர்ச்சுனு'' முகப்பு அட்டையில் பெருமையுடன் தாங்குகின்றான்.

திறமை பெருமை தரும்; அதனை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுங்கள்.

# சாதனை புரிந்த யாழ். சிறுர்கள்

கடந்த மூன்று வருடங்களாக –

தமிழ்ப்பகுதிகளில் பள்ளிக்கூடம் நடந்த நாட்களை விட பகிஷ்கரிப்பு நடந்த நாட்களே அதிகம்.

பள்ளிக்கூடங்களில் மாணவர் படித்த நாட்களை விட அகதிகள் வந்து பாதுகாப்பு நாடிய நாட்கள் அதைவிட அதிகம்.

இத்தனை இடர்ப்பாடுகள் மத்தியிலும் தம் கல்விச் செல்வத்தைக் கட்டிக்காப்பதில் எம் சிறுர்கள் பெரும் சிரமம் எடுத்து வருகிறுர்கள்.

இவர்களில் சிலர் வேதனையான இக்காலகட்டத்திலும் பாடசாலை சோதனைகளில் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றுர்கள்.

இவர்களில் 1986-ம்வருடஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் 189 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்ற அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி மாணவன் செல்வன் த. திருமுருகனும் குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவன் ம. அரவிந்தனும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

## செல்வன் த. திருமுருகன்

இவர் வியாபாரிமூலை மிருகவைத்தியர் மு. தங்கராசாவின் புதல்வன், இவரது பொழுது போக்குகள்: ரி. வி. பார்த்தல்; மீன்வளர்த்தல், கோழிப்பண்ணையில் தாயாருக்கு உதவி செய்தலாகும்.

தான் படித்த பாடசாலைக்கு நன்றிக்கடனுக இந்த வகையில் பெருமை தேடிக் கொடுத்ததையிட்டு பெருமைப்படும் அவர்; இவ்வகையில் தான் உயர்வடைய உதவிய பாடசாலைக்கும் தன் வகுப்பாசிரியருக்கும் தனது நன்றியைத் தெரிவிக்கிறுர்.

அவரது வகுப்பாசிரியர் திரு. ஏ. எம். இராஜேந்திரம் செல்வன் திருமுருகனைப் பற்றி கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு சொன்னுர்:-

இவர் நல்ல ஒழுக்கமுள்ள, சுறுசுறுப்பான பாடங்களைத் தாஞகப்புரிந்து கொள்ள முயற்சி செய்யும் ஒரு சிறந்த மாணவன்.

கடந்த இருவருடங்களாக இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்ட; படிப்பிலே பிடிப்புள்ள ஒரு துடிப்பான மாணவன் இவர்.

இவரது சுறுசுறுப்பும் வேலைகளில் காட்டும் விறுவிறுப்பும் இவர் எதிர் காலத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு சகலகலாவல்லவனுக வருவார் என இன்றே கணித்து கட்டியம் கூற வைக்கிறது.

## செல்வன் ம. அரவிந்தன்

உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியரும் பிரபல சமயப் பிரசங்கியுமான திரு. சிவமகாலிங்கத்தின் மகனுன இவர், தந்தையின் உந்துதலால் புத்தகங்கள் வாசிப்பதைத் தனது பொழுது போக்காகக் கொண்டுள்ளார்.

அரவிந்தன் பற்றி அவரது வகுப்பாசிரியர் திரு. ஞ. இரத்தினசிங்கம் பின்வருமாறு கூறினுர்.

இவரது வகுப்பிலே இவர் ஒரு விதிவிலக்கான மாணவர் 12ஆம் வகுப்பு மாணவனை விடத் திறமையாகக் கதை, கட்டுரைகள் எழுதுவார். சிறு வயதிலேயே பலநாடகங்களைத் தானே எழுதி மேடையேற்றியுள்ளார். இதற்கெல்லாம் இவரது வாசிப்புப் பழக்கம் துணை நிற்கிறது.

பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள் உட்பட சகலவிதமான புத்தகங்களையும் படிக்கும் அரவிந்தன், விரும்பி வாசிப்பது சஞ்சீவி' யில் தொடராக வெளிவரும் திரு. ம. க. அ. அந்தனிசில் எழுதும் யாழ் கோட்டை பற்றிய சரித்திரமாகும்.

அவரது வாசிப்பு ஆர்வமும், தமிழ் அறிவும், பிற

எஸ். ஜே. பி. ரட்ணதுரை

காலத்தில் அவர் ஒரு சிறந்த எழுத்தாளனுக வருவான் என் பதை முன்கூட்டியே எடுத் தியம்புகின்றன.

இதே பரீட்சையில் 187 புள்ளிகள் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றும் இடத்தை பெற்றவர்களும் யாழ் மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களே.

சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மாணவன் செல்வன். எஸ். நிரஞ்சன்; சரவணை நாகேஸ்வரி ம. வி. மாணவன் செல்வன். கு. கிருபாகரன் ஆகியோரே அவர்கள்.

## சோமசுந்தரம் நிரஞ்சன்

சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மாணவனுன சோம சுந்தரம் நிரஞ்சன் 187 புள்ளி கள் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றும் இடத்தைப் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி மிருகவைத் தியர் திரு, கே. சி. சோம சுந்தரத்தின் மகனுன இவர் தமது 4 ஆம் வகுப்பு வரை யிலான கல்வியை கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக் களப்பு, திருகோணமலைப் பாடசாலைகளில் பயின்முர்

புத்தகங்கள் வாசித்தல், நண்பர்களுடன் விளையாடுதல் தனது பொழுது போக்குகள் என்று கூறும் நிரஞ்சன் ஒரு டாக்டராக வரவேண்டும் என் பதே தனது இலட்சியம் என் கிமுர்.

இவரது கல்லூரி அதிபர் திரு. கி. பாலச்சந்திரன் இவர் பற்றி கூறுகையில்;

துடிதுடிப்பு மிக்க இவர் தான் பயிலும் பாடசாலைகளுக் கெல்லாம் பெருமை தேடித்தரு வார் என்பது நிச்சயம் என் முர்.

பாடசாலை ஆசிரியர்கள் இவருக்குப் பெறுமதிமிக்க பணப்பரிசு ஒன்றைக் கொடுத் துள்ளதாகவும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இவரைப் பாராட்டி கௌரவித்துள்ள தாகவும் அதிபர் தெரிவித் தார்.

## செல்வன் கு. கிருபாகரன்

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில் பயிலும் இவர் 187 புள்ளிகள் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன் மும் இடத்தை பெற்றுள்ளார்.

வவுனியா உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரிந்து வன்செயலின் போது அகால மரணமடைந்த திரு. ஆறு முகம் குணநாயகத்தின் மக னுன இவரது பொழுது போக்குகள் முத்திரை சேகரித் தல், பத்திரிகை சஞ்சிகைகள் வாசித்தலாகும்.

இவரது அதிபர் திரு. வி. இராமலிங்கம் இவர் பற் றிக் கூறுகையில்;

''இல்ல விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டி களில் பங்குபற்றி பாட சாலைக்கு பெருமைகள் தேடிக் கொடுத்த கிருபாகரன் இன்று கல்வியிலும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கு கல்விச் செல்வமானது பரம்பரைச் சொத்தாகும்" என்முர்.

தந்தையைப் போல் கல்வி மானுக உயர் பதவிகளை அடைய வேண்டுமெனும் அவா வுடைய கிருபாகரன், தனது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்க மும் அளிக்கும் தன் தாயாருக் கும், வகுப்பாசிரியர் திருமதி. சௌ. விநயகமூர்த்திக்கும் தான் என்றும் நன்றிக்கடன் உள்ளவர் என்று கூறுகிருர்.

நன்றிமறவாத இவரது நற்பண்பே இவருக்கு தந்தை யைப் போல் நல்ல பல பதவி களை தேடித்தரும் என்பது திண்ணம்.

## கடவுள்

மனித சேவையிலே கடவுளைக் காணலாம். தன்னலங் கருதாது பிறர் நலனில் நாட்டமுள்ளவன் கடவுள் அம்சம் பொருந்தியவன். கடவுள் சுவர்க்கத்திலோ அன்றிப் பாதாளத்திலோ இல்லை. மேற்கூறிய அம்சங்கள் பொருந்திய எல்லோரிலுமிருக்கின்முர். -- மகாத்மா காந்தி

# இப்படியும் ஒரு சட்டம்

ஒரு நாட்டில் எல்லா விலங்குகளும் சந்தோஷமாக வாழ்ந்துவந்தன. அடிக்கடி கூடித் தங்கள் தங்கள் வீரப்பிரதாபங்களைச் சொல்லிக் கொண்டு வருவது அவற்றின் வழக்கம். ஒருநாள் ஓர் எருமை கூறியது. "ஒரு வேட்டைக்காரன் என்னை வேட்டையாட வந்தான். துப்பாக்கியை என்னை நோக்கிக் குறிபார்த்தான். ஆனால் நானோ அவரின் கால்களுக்கூடாகத் தப்பி மறுபக்கம் ஓடிவிட்டேன்."

சில மிருகங்கள் இதனை நம்பமுடியாது வெறும் புழுகு என்றன. மந்தபுத்தி உள்ள சில மிருகங்களோ இதனை ஆதரித்தன. கூச்சலும் கும்மாளமும் அதிகரித்தன. ஒற்றுமையே குலைந்து விடும்போல் இருந்தது. நரி சமரசத்துக்கு வந்தது.

இனிமேல் ஒரு சட்டம் கொண்டு வருவோம். யார் எதனைச் சொன்னாலும் எல்லோரும் நம்பவேண்டும். "நான் நம்பமாட்டேன்" என்று கூறுபவருக்கு மரணதண்டனை என்றது. சண்டைசச்சரவைத் தவிர்ப்பதற்கு இது ஓர் உபாயமாக எல்லா மிருகங்களுக்கும் பட்டது. எல்லா மிருகங்களும் சம்மதித்தன. ஆனால் ஆமைக்கு மட்டும் கொஞ்சம் முகம் கருகியது.

அடுத்தமுறை கூட்டம் கூடியது. அப்பொழுது ஒரு கரடி தன் அனுபவத்தைக் கூறியது.

"நான் ஒருமுறை தண்ணீர் விடாயினால் கஷ்டப்பட்டேன். உடனே மழை எப்படிப் பெய்கிறது என்று. யோசித்தேன் பாய்ந்தேன் மேகத்தை நோக்கி, காலால் மேகத்தைக் கிழித்தேன். தண்ணீர் அருந்தினேன். விடாய் தீர்ந்தது எப்படி என் வீரம்?" என்றது. ஆமைக்குப் பொறுக்கவில்லை.

"நீ என்ன கரடி விடுகிறாய்? நீயாவது மேகத்தைக் கிழிப்பதாவது நான் நம்பமாட்டேன்", என்றது. கரடிக்குப் பொல்லாத கோபம். "எங்கள் சட்டம் என்ன சொல்கிறது?" என்றது. உடனே ஆமைக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஒட்டகச் சிவிங்கியின் தலைமேல் ஏற்றி மலையில் இருந்து கீழே போட்டுக் கொல்வது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பாவம் ஆமை ஒட்டகச்சிவிங்கியின் தலைமேல் ஏற்றப்பட்டது. சகல மிருகங்களும் ஊர்வலமாக ஒட்டகச் சிவிங்கிக்குப் பின்னால் சென்றன. வழியில் ஓர் ஆறு. அதன்மேல் ஒரு பாலம். ஊர்வலம் பாலத்தின் நடுவில் வந்து கொண்டிருந்தது.

**"இனிமேல் ஒரு சட்டம் கொண்டு வருவோம்; யார் எதனைச் சொன்னாலும் எல்லோரும் நம்பவேண்டும் 'நான் நம்பமாட்டேன்' என்பவருக்கு மரணதண்டனை" ■ இப்படி நரி ஆலோசனை கூறியது.**

"ஐயோ காப்பாற்றுங்கள் ஒரு மீன் என்னைக் கடித்து இழுக்கிறது" என்று கத்தியது ஆமை. சகல மிருகங்களுக்கும் இக் கூக்குரல் கேட்டது. அவைகளின் பொறுமைக்கும் எல்லை வேண்டாமா? இந்த ஆமை ரொம்பத் துடுக்குத் தனமாக அல்லவா நடந்து கொள்கிறது. எல்லா மிருகங்களும் ஒரே குரலில்

"என்ன மீனாவது கடிப்பதாவது அதுவும் உயரமான ஒட்டகச்சிவிங்கியின் தலையில், எங்களை நம்பச் சொல்கிறாயா? இதனை நாம் எப்படி நம்புவது நாங்கள் நம்பமாட்டோம்" என்றன.

உடனே ஆமை "நண்பர்களே எங்களது சட்டம் என்ன சொல்கிறது" என்றது. எல்லா மிருகங்களும் தலையைக் குனிந்து கொண்டன. ஒட்டகச்சிவிங்கியும் தான்.

ஆமை அதன் தலையில் இருந்து இறங்கி தன்பாட்டுக்குச் சென்றுகொண்டிருந்தது. ✶

**ஹெலன் பேர்ண்ஸ்**

# அருச்சுனன் வந்துவிட்டான்

அருச்சுனன் வந்து விட்டான்
அதர்மமே அழிந்து போகும்
ஆற்றிடும் கடமை என்றும்
அகந்தையை அழித்துச் செல்லும்.

கண்ணனின் கீதை கேட்டான்
காண்டீபம் கையில் சேர்த்தான்
எண்ணத்தில் தெளிவு கொண்டான்
எதிலுமே பேதம் இல்லான்.

வெற்றியும் தோல்வி தானும்
வேறென நோக்கம் கொள்ளான்
பற்றிய பணியைக் கொண்டான்
பலனையே கருத்தில் எண்ணுன்.

உயர்ந்தவன் தாழ்ந்தவ னென்றும்
உரிமையே சிறிதும் பாரான்
எவரையும் சமமாய் நோக்கும்
எண்ணமே கொள்கை ஆனுன்.

நண்பனே எதிரி என்றே
நல்லவன் தீயோன் என்றே
சிந்தனை சிறிதும் இல்லான்
செயல் ஒன்றே சேவையானுன்.

வ. யோகானந்தசிவம்

## அர்ச்சுன

### சிறுவர் வட்டம்

**உறுப்பினர்கள்**

1. செல்வன் தேவரசோ நிர்மலன்
கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

2. செல்வன் கனகசிங்கம் இராகுலன்
யாழ். புனிதமரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

3. செல்வி பாமினி யோகானந்தவேல்
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி.

4. செல்வி சாவித்திரி சுப்பிரமணியம்
தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், பருத்தித்துறை.

5. செல்வன் செந்திவேல் குமாரவேல்
சிவகுரு வித்தியசாலை, வல்வெட்டித்துறை.

6. செல்வி கேமலதா நடனசண்முகம்
யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.

7. செல்வன் T. K. ராசா
அ. த. க. பாடசாலை, வயாவிளான்.

## உங்கள் நோக்கு:

அர்ச்சுன வெளியீட்டாளர்களுக்கு, தாங்கள் வெளியிட்ட "அர்ச்சுன" என்ற சஞ்சிகையை வாசித்து மிகவும் இன்புற்றேன். சிறுவர் முதல் பெரியோர் வரை வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடியதும் இன்புறக்கூடியதுமான ஒன்றுகும். அர்ச்சுன வளரட்டும்!

-- எஸ். விருத்தாசலம்
உடுவில்.

அடுத்த இதழில் "உங்கள் நோக்கு" பூரணமாக இடம்பெறும்.

# வெள்ளை கிறிஸ்மஸ்

எஸ். ஜெகதீசன்

சர்வதேச ரீதியில் நடைபெறும் சகல சமய பண்டிகைகளிலும் தனக்கென ஒரு தனியிடம் பெற்றுத் திகழ்வது கிறிஸ்மஸ்.

ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்மஸ் ஆவலுடன் கொண்டாடப்படும் ஒரு வித்தியாசமான பண்டிகையாகும்.

சிறுவர், பெரியோர், முதியோர், ஏழை, பணக்காரர் என்ற பேதமின்றி அனைவராலும் ஆவலுடன் எதிர்நோக்கப்பட்டு ஆரவாரத்துடன் கொண்டாடப்படும் இப் பண்டிகை வெள்ளை கிறிஸ்மஸ் என *(White Christmas)* அழைக்கப்படுகின்றது.

வெள்ளைக்காரர்கள் அனேகமாக வசிப்பதால் இப் பண்டிகை அப்படி அழைக்கப்படவில்லை.



மார்கழி மாதம் பனி கொட்டோ கொட்டென்று கொட்டி வீடுகள், மரங்கள், சாலைகள், மைதானங்கள் என எல்லா இடங்களையும் தன் வயப்படுத்தியிருக்கும்.

அதனால் எங்கு பார்த்தாலும் ஒரே வெள்ளை மயம் .. எனவே அதில் கொண்டாடப்படும் கிறிஸ்மஸும் வெள்ளை கிறிஸ்மஸ்...

நவம்பர் மாதம் ஆரம்பித்து விட்டாலே போதும்... கிறிஸ்மஸ்சை ஆவலுடன் எதிர்நோக்க ஆரம்பித்து விடுவார்கள்.

வீடுகள், கடைகள், கட்டடங்கள், அலுவலகங்கள், ரயில் வண்டி நிலையங்கள் அனைத்தும் அலங்கரிக்கப்பட்டுவிடும்.

டெலிவிஷனும் ரேடியோவும் கூட கிறிஸ்மஸில் இருந்து புதுவருடம்வரை திறமான நிகழ்ச்சிகளை தயாரித்து அளிக்கும். அத்துடன் அந்த வருடத்தில் மக்கள் மனதில் இடம் பிடித்த நிகழ்ச்சிகள் கிறிஸ்மஸ்ஸிக்கு முன் தினமும் *(Christmas Eve)* புதுவருடத்திற்கு முன்தினமும் *(New Years Eve)* மீண்டும் மக்கள் மனதில் ஒருதரம் இடம்பிடிக்கும்.

## வான்கோழி இறைச்சி

ஐரோப்பாக்கண்டம் முழுவதுமே கிறிஸ்மஸ் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது என்றால் வான்கோழி (Turkey) இறைச்சியும் மதுவும் கண்டிப்பாக இருந்தாக வேண்டும்.

அப்படி ஒரு சம்பிரதாயம் அங்கு...

இலங்கையில் விற்பனையாகும் கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் பல ஐரோப்பாவையே பின்னணியில் கொண்டனவாக அமைந்துள்

ளதையும் அவதானிக்க முடியும்.

உறைபனியில் ஆழ்ந்து உறங்கிக் கிடக்கும் புகைபோக்கியுடன் கூடிய வீடுகள்.

பனியின் பின்னணியில் வெளியே எட்டிப்பார்க்கும் மொழு மொழு வென்ற சிட்டுக் குருவிகள்... *(Robin)*

நெளியல் நெளியலான அந்த இலைகள்... *(Poin Settia)*

'சாந்த குளோஸ்' எனப்படும் நத்தார் பாப்பாவின் பனி விளையாட்டு.

இவை நிஜத்தின் தரிசனங்களாவது ஐரோப்பாவில் மட்டுமே!

வெள்ளையர்கள் வயது வந்தவர்களுக்காக என்று கூட கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களை வெளியிடுவதில் தமது கற்பனையை தற்பொழுது திசை திருப்பியிருக்கின்றனர்கள்.

*SANTA IN SEX*

என்ற இந்த ரக வாழ்த்து மடல்களின் விற்பனை அமோகம்!

அந்த வாழ்த்துமடலில் ஆபாசம் தெரிவதில்லை. நகைச்சுவை உணர்வு பரிணமிக்கும்.

## பொக்ஸிங் தினம்

கிறிஸ்மஸுற்கு அடுத்த நாள் பொக்ஸிங் தினம்

பொக்ஸிங் என்ற குத்துச் சண்டை போடும் நாள் அல்ல இது!

தினசரி வரும் தபாற்காரரும், பால்காரரும் பொதுவாக கிறிஸ்மஸ் தினமன்று வரமாட்டார்கள்.

அவர்களுக்கும் ஏனைய உற்றார் உறவினர் நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும்... *Boxes*... அதாவது பரிசுப் பெட்டிகளை வழங்குவது தான் இந்த *Boxing Day*.

ஆச்சரியமாக இல்லையா? இன்னுமொன்று தெரியுமா? கிறிஸ்மஸ் தினத்தன்று இரவு சரியாக பன்னிரண்டு மணிக்கு யாரும் யாரையும் முத்தமிடலாம்.

—ஆனால் முத்தம் மட்டும் தான்!

--இதற்கு சட்டம் கூட அனுமதி வழங்கியுள்ளது.

சரி... சரி... இதென்ன ஒரே ஆபாசம் என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குத் தெரியத்தான் செய்கிறது.

கிறிஸ்மஸ் பப்பா புகைக் கூண்டு வழியே வருவார்...... குழந்தைப் பிள்ளைகளுக்கு விருப்பமானவற்றை அவர்களின் தலைமாட்டில் வைத்துச் செல்வார் எனப் பழங் கதை சொல்லவா?

நத்தார் பாப்பா உண்மையில் அப்படி எங்கும் வருவதில்லை. பெற்றோர்கள் தான் சிறுவரின் விருப்பத்தை நன்கு அறிந்து அவர்களுக்குத் தேவையானவற்றைத் தலைமாட்டில் வைத்துவிட்டு...

—அப்படிக் கதை கட்டுகின்றனர்கள்.

நானும் அப்படி கதை கட்டவா?

—அதை நம்ப நீங்களும் என்ன குழந்தைகளா?

* * *

## வருந்துகிறோம்

உங்கள் அபிமானத் திங்கள் இதழ் அர்ச்சுனு இரண்டாவது இதழ் வெளிவரத் தாமதமாகி விட்டது. அர்ச்சுனு தொடர்ந்து திங்கள் ஒருமுறை வெளிவரும். வாசகர்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகின்றோம். இனிமேல் மாதாந்தம் உரியவேளையில் அர்ச்சுனுவை வெளியிட ஏற்பாடுகள் செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

(ஆ.....ர்)



# உழவர் திருநாளாம்
# தைத் திருநாள்

ஆண்டு தோறும் பல திருநாட்களைக் கொண்டாடுகின்றோம். அவை ஒற்றுமையை வளர்க்கவும் புத்துணர்வை ஊட்டவும் தெய்வபக்தியை வளர்க்கவும் உறுதுணைபுரிகின்றன. அத்தகைய திருநாட்களில் ஒன்றாகிய தைப் பொங்கலானது தமிழர்கள் தங்களது நன்றிக்கடனைச் செலுத்துவதும் நல் வழிப்படுத்துவதுமாக அமைந்திருக்கிறது.

தைமாதம் முதல் நாளிலே தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. உழவர் திருநாள் என்றுமழைப்பர். ஏனெனில் உழவர்கள் உணவுப்பொருள்களை உண்டாக்கி உயிர்களைக் காப்பாற்றுகின்றார்கள் உழவுத் தொழிலின் சிறப்புப்பற்றி

''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதாவது உழுதலால் வரும் மெய்வருத்தம் நோக்கிப் பிற தொழில்களைச் செய்து திரிந்தாலும் உலகம் ஏர்த்தொழில் செய்வாரின் பின் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

பாரதியாரும்

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று கூறியிருக்கிறார். அவ் வந்தனை அவனது தொழிலுக்கு இன்றியமையாததாக இருக்கும் மழையையும் வெய்யிலையுந் தரும் சூரியபகவானுக்கே உரியது. சூரியன் வேண்டிய காலத்தில் மழையைப் பெய்வித்துப் பயிர்களை வளரச் செய்கின்றான். உழவனுக்குச் சூரியன் செய்யும் நன்மை அளவிடக்கரியது. அந்த நன்மையை உழவன் மறப்பதில்லை.

உழவன் சூரியனைத் தெய்வமாகப் போற்றிப் பொங்கலிட்டு தன் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றான். அதற்குரிய நாளாக தைமாத முதல் நாளைத் தெரிவு செய்கின்றான் அடுத்ததாகத் தனது நன்றியறிதலை மாடுகளுக்குத் தெரிவிக்கின்றான் அவைகள் வயலை உழுது வளமாக்கின்றன. பாலைத் தந்து மக்களைக் காப்பாற்றுகின்றன. எனவே தான் அடுத்த நாள் பட்டிப்பொங்கல் இடுகின்றான்.

பொங்கலுக்கு முன்னர் வீடுகளைக் கழுவியும் வெள்ளை அடித்தும் சுத்தம் செய்வர். பொங்கலன்று அதிகாலை நீராடிப் புத்தாடை அணிந்து இறைவனை வழிபட்டு முற்றத்தில் மெழுகிக் கோலம் போட்டு நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றுவர். பின்னர் கோலத்தின் நடுவே புதுப்பானை வைத்து, பானையின் கழுத்திலே மஞ்சள் இலை, மாவிலைப் இஞ்சி இலை என்பனவற்றைக் கட்டுவர். பானையில் பாலை நிரப்பிய பின்னர் அடுப்பிலேற்றிப் பொங்குவர். பொங்கி வரும்போது சூரியனை வணங்குவர் ''எல்லாச் செல்வங்களும் பொங்கவேண்டுமென்று வேண்டுவர்''. பச்சையரிசி பயறு சர்க்கரை ஆகியவற்றைச் சேர்த்து பொங்கலிட்ட பின்னர் தலை வாழை இலையில் படைத்துத் தோத்திரம் பாடி வணங்கிய பின்பு எல்லோரும் கூடி உண்டு மகிழ்வர். சிறுவர்கள் வெடிசுட்டும் வாணம் விட்டும் ஒன்று கூடி மகிழ்வர்.

செல்வி சுலோசனா இராமச்சந்திரன்

''பொங்கலின்று பொங்கல் – நல்ல
புத்தமிழ்தப் பொங்கல்
மங்களங்கள் பொங்க – எங்கள்
மனையிலிடும் பொங்கல்.''

[சென்ற மாதம் கொண்டாடப்பட்ட தைப் பொங்கல் பண்டிகை பற்றிய கட்டுரை இது]

அங்கம்: 2

# அறிவுலக அறிமுகம்

கலாநிதி சபா ஜெயராசா

நன்றாகக் கொழுத்த எருதுகள் வீதியில் வந்தன. அவற்றின் கழுத்தில் அழகிய மணிகள் இருந்தன. எருதுகள் அசைந்து சென்றன. கழுத்து மணிகளும் அசைந்தன. எருதுகளின் பின்னே உழவன் சென்றான். அவனது தோளிலே மண்வெட்டி இருந்தது. அதன் கூர் பளபளத்தது.

கண்ணனுக்குப்பாட்டு வந்தது.

கழுத்தில் மணியசையும்
காற்றில் இலை யசையும்
ஊற்றில் நீரசையும்
உழவர் கையசையும்.

"இந்த மண்வெட்டியின்றி நிலத்தைப் பண்படுத்த முடியாதா" என்று பலா கேட்டான் "அதுதான் கருவியின் சிறப்பு" என்று கண்ணன் கதை சொல்லத் தொடங்கினான். "மண்வெட்டி – ஒரு சிறிய கருவி. ஓர் அலகும் ஒரு பிடியுங் கொண்டது மண்வெட்டி. அது உழவனின் வேலையை எளிதாக்கி விடுகின்றது."

"அதோ ஓர் இரும்புப் பாரையைப்பார்! ஓர் இரும்புத் தண்டின் நுனியில் ஓர் அலகு மட்டும் உண்டு. ஒரு முறை ஓங்கிக் குற்றிப்பார். நிலத்தில் ஒரு புற்றே உண்டாகிவிடுகின்றது."

பாலா கதை கேட்கத் தொடங்கினான். "அது மிகவும் பழைய காலம். மனிதர் குகைகளிலே வாழ்ந்த காலம். அவர்கள் கல்லினாற் செய்த கருவிகளைப் பயன்படுத்தினர்" என்றான் கண்ணன். "கல்லினாற் செய்த கருவிகள் இன்றும் உண்டா?" என்று பாலா கேட்டான். "ஓம் உண்டு. எங்கள் வீட்டிலுள்ள அம்மி கல்லினாற் செய்யப்பட்ட கருவிதானே" என்று கண்ணன் பதில் சொன்னான்.

## கருவியின் கதை

"கல்லென்ன, மண்ணாலும் கருவி செய்ய முடியும். பானையும், முட்டியும் ஆற்றங் கரைகளில் வாழ்ந்த பழைய மனிதரால் செய்யப் பெற்றன. மனிதரின் உழைப்பினாற் புதிய புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன' என்றான் கண்ணன்.

உழைப்பின்றிக் கருவிகளைக் கண்டுபிடிக்க முடியாதா?' என்று பாலா கேட்டான். 'முடியவே முடியாது. உழைப்புத்தான் முன்னேற்றத்துக்கு அடிப்படையானது. உழைப்பே செல்வம்' என்று கண்ணன் தொடர்ந்தான்.

'உலோகங்களை மனிதர் கண்டறிந்தனர். உலோகங்களைப் பயன்படுத்திக் கருவிகள் செய்தனர். கத்தி, கோடரி, உளி போன்றவை எமது வேலைகளை எளிதாக்கி விடுகின்றன. அவற்றின் அலகுகள் கூராக இருக்கும். அவற்றைச் 'சாய்தளம்' என்று கூறுவர். சாய்தளமாக இருக்கும் அலகுகள் வெட்டும் வேலையை எளிதாக்கிவிடுகின்றன.'

வேலைகள் எளிதாக்குப்படல் மூன்று அமைப்புக்களுடன் தொடர்புடையன. அவையாவன; 'சுழலிடம்', 'சுமை', 'எத்தனம்', என்பனவாகும். பாட்டியினுடைய பாக்கு வெட்டியை வைத்துக்கொண்டு அவற்றை விளக்கலாம்.

பாக்குவெட்டியின் நுனியில் ஓர் இணைப்பு உண்டு. அது 'சுழலிடம்' எனப்படும். நடுவே அமைந்துள்ள பாக்கு 'சுமை' எனப்படும். கைகளால் அழுத்துதல் 'எத்தனம்' எனப்படும்.

கண்ணன் பேசிக் கொண்டிருக்கும்பொழுது பாலா குறுக்கிட்டான் 'சுழலும் வாள் மரத்தை வெட்டுகின்றது. இயந்திரம் வாளைச் சுழற்றுகின்றது. இயந்திரத்தால் இயங்கும் கருவிகளையும் பார்க்கலாம்' என்றான்.

கண்ணன் பாடினான்.

மலரில் வண்டசையும்
மணியில் நாவசையும்
பொறியிற் சில்லசையும்
பூட்டில் யார் அசைவார்?

✷

# புகழ் பூத்த ஊர் குப்பிழான்

எனது ஊரின் பெயர் குப்பிழான். இது யாழ்ப்பாணத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. பனஞ்சோலைகளும் பச்சைபசேலெனக் காட்சியளிக்கும் தோட்டங்களும் நிறைந்தது எனது கிராமம். எனது கிராமத்தின் பெருமைக்குப் பல தனிநபர்களினதும் குழுக்களினதும் அயராத முயற்சியே காரணம்.

எனது ஊர் அந்நிய ஆட்சிக் காலத்திலேயே புகழ் பெறத் தொடங்கிற்று. தீந்தமிழையும் சைவத்தையும் பேணிக் காத்து வளம்படச் செய்த நல்லைநகர் நாவலரது சீடரான காசிவாசி செந்திநாதையரது பிறப்பிடம் எனது ஊரான குப்பிழானே. காசிவாசி செந்திநாதையாவின் புகழை நாவலரை அறிந்த அனைவரும் அறிவர். நாவலருக்குப் பிறகு அவரது வழியில் நின்று அவர் செய்த பணிகளையும் தொடர்ந்து செய்து புகழ் பெற்றவர் எமது ஐயா அவர்கள். அவர் பல நூல்களை இயற்றியவர். அவரது நூல்களுள் முதன்மையானது ''கந்தபுராண நவநீதம்'' ஆகும். நாம் ஐயாவை போற்றிச் சிறப்பிக்குமுகமாக அவரது திருவுருவச்சிலையையும் நிறுவியுள்ளோம்.

இங்கே பல விநாயகர் ஆலயங்கள் உண்டு. இதில் எமது கற்கரை விநாயகர் பெரும் திருவருள் படைத்தவர். எமது ஊரவர் நித்திரை விட்டெழும் பொழுதும், நித்திரை செய்யப் போக முன்னரும் துன்பங்கள் வரும் பொழுதும் ''பிள்ளையாரே'' என்று வணங்குவார்கள்.

எமது வாசிகசாலையும் சிறப்பு வாய்ந்தது. இவ் வாசிகசாலை வாரந்தோறும் பஜனைகள், கருத்தரங்குகள், புராண மாநாடுகள், விழாக்கள் போன்றவற்றை நடாத்தி வருகிறது. இவ் வாசிகசாலையில் விஞ்ஞான, அறிவியல் கதைப் புத்தகங்கள் நிறைய உண்டு. இதனுல் மாணவரான எமக்குப் பெரும் நன்மையாகும். இதில் நானும் ஒரு அங்கத்தவனுக இருந்து பயன் பெறுகின்றேன்.

எங்கு பார்த்தாலும் கற்பகதருவான பனைசோலைகளாகக் காட்சியளிக்கும். எமது ஊர்ப் பனம் பண்டங்கள் பிரசித்தி பெற்றவை. எமது ஊரில் பெரும்பாலானேர் கமக்காரர்களே. எமது ஊரின் எல்லைப் பகுதிகள் எல்லாம் தோட்டங்களே.

காலையில் எழுந்து எமது ஊரைச் சுற்றிப் பார்த்தால்... அடடா! அற்புதமான இரம்மியமான காட்சிகளைக் காணலாம். பனித்துளிகள் தோட்டப் பயிர்களில் உறைந்துபோய் இருக்கும். அதில் காலைப் பரிதியின் செவ்வொளி பட்டு வர்ணஜாலங்கள் தெறிக்கும். வீதியோரம் எங்கும் புற்கள் மெத்தென வளர்ந்திருக்கும். காலைக் காற்று மெல்லென வீசும். புட்கள் கானம் பாடும். பூக்கள் சிரிக்கும். திரும்பி வரவே மனமிருக்காது. பல நகரவாசிகள் அடிக்கடி எமது ஊருக்கு வந்து ஓய்வு எடுத்துவிட்டுப் போவார்கள்.

செல்வன் து. தங்கரூபன்
(யாழ். இந்துக் கல்லூரி)

# யப்பானின் மறுபெயர் சுவர்க்கமா?

''Land of the rising sun'' என்ப் பொதுவாக வர்ணிக் கப்படும் யப்பான் தேசம், கொக்கைடோ, கொன்சு, சிக் கொக்கு, குயூசு (Kokkaidu, Honshu, Shikoku, Kuyushu) என்னும் நான்கு பிரதான தீவுகளை உள்ளடக்கும். யப் பான், எமது நாடாகிய இலங் கைக்கு வடகிழக்குத் திசை யிலும், ஆசியாக் கண்டத்தின் கிழக்கு ஓரத்திலும் அமைந் துள்ளது.

337,765 சதுர கிலோமீற் றர் பரப்புடைய இத்தேசம், உலக நிலப்பரப்பின் 03 வீத மாகும். எரிமலைக்குப் பிரசித்தி பெற்ற இந்த நாட்டின் சனத் தொகை 12.1 கோடியாகும். அதாவது 1 சதுர கிலோ மீற் றருக்கு 325 மக்கள் வாழ்கின் ருர்கள். சனத்தொகை ரீதி யாகக் கணிக்கும் பொழுது இது உலக நாடுகளில் ஏழா வது இடத்தைப் பெறுகின் றது.

''யப்பானுக்கா புலமைப்பரி சில் பெற்றுப் போகிருய்? அப் படியாளுல் உன் மனதில் நீ என்னென்னத்தைக் கற்பனை செய்கிருயோ, அங்கு அதை யெல்லாம் காணலாமே'' என்று ஒருவர் கூறியது எவ்வ ளவு உண்மை என்பது அங்கு சென்றபின் புரிந்தது.

இலங்கையில், அதுவும் யாழ் நகரிலிருந்து, யப்பானின் தலை நகராகிய ரோக்கியோ (Tokyo) நகரில் இறங்கியதும், சுவர்க்கலோகத்தை அடைந்த அநுபவம் ஏற்பட்டது. வான ளாவிய கட்டிடங்களும், அகல மான, அழுத்தமான, சுத்த மான வீதிகளும், புத்தம்புதிய வாகனங்களும், மக்கள் நட மாடவும் சைக்கிள்கள் செல்வ தற்கும் புறம்பாக ஒதுக்கப் பட்ட பாதைகளும், எதுவித நெருக்கடியின் மத்தியிலும் நிலவிய ஒழுங்கும் என் மன தைக் கவர்ந்தன.

### யப்பானியர்

யப்பானிய மக்கள் மிகவும் நல்லவர்கள். மிக உயர்ந்த பண்பும் மனப்பாங்கும் கொண்டவர்கள். தங்கள் நேரத்தையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது மற்றவர் களுடன் விசேடமாக அந்நி யர்களுடன் மிக ஒழுக்கமான பணிவான முறையில் பழகுவ தோடு உதவியும் செய்வார் கள். காலை 7 மணியில் இருந்து இரவு 10 மணிவரை மிகவும் சுறுசுறுப்பாகத் தம் பணிகளில் ஈடுபடுவர். தெருஓரங்களிலோ சந்திகளிலோ இளைஞர்கள் கூடிநின்று அரட்டை அடிப்ப தையோ, மற்றையோரின் நடவடிக்கைகளில் தலையிடுவ தையோ, அந்நாட்டில் காண முடியாது. அந்நாட்டின் துரித முன்னேற்றத்திற்கு இம்மக் களே காரணம் என்றுல் மிகை யாகாது.

### வாழ்க்கை முறை

மிக உயர்ந்த வகையில் சமத் துவத்தைப் பேணும் இவர்கள், கணவனும் மனைவியும் வேலைக் குச் சென்று உழைப்பர். மேல் நாட்டுப்பாணியில் உடை அணிவர். ஆனுல் இவர்களு டைய பாரம்பரிய உடை ''கிமோனு'' எனப்படும். அதோடு பெண்கள் விசிறி ஒன் றைக் கொண்டு செல்வர். இவர்கள் எம்மைப்போல் சோறும் உண்பர். ''சொப் ஸ்ரிக்'' எனப்படும் இரு மெல் லிய தடிகளின் உதவியோடு சாப்பிடுவது வழக்கம். விசே டமாக இவர்கள் விரும்பி உண் பது ''சுசி'' (Sushi) எனப் படும் அவிக்கப்படாத மீனு கும். இதை நானும் உண் டேன். நன்ருகத்தானிருந்தது. அடிக்கடி ''Green tea'' எனப் படும் பச்சைத் தேனீரைப் பருகுவர். பேசும்போது தலையை லேும் கீழுமாக நன் ருக அசைப்பதை அவதானிக் கலாம்.

இவர்கள் அநேகமாகப் பௌத்த மதத்தைச் சேர்ந்த வர்கள். இவர்கள் விக்கிரகங் களை வணங்குவதையும் காண லாம். மணம் முடிக்கும்போது சின்ரோ வழமைப்படியும் (Shinto rites), மரணச்சடங்கு கள் பௌத்த சமய முறைப் படியும் நடக்கும். பெற்றே

செல்வி துஷ்யந்தி பரராசசிங்கம்
(மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.)

ரால் நிச்சயிக்கப்படும் திருமணங்கள் கிடையா. எல்லாம் காதல் திருமணங்களே.

**கல்வி**

யப்பானில் கற்ருேர் வீதம் 100 ஆகும். (Literacy rate) ஏனெனில் 6 வயதில் பாடசாலை செல்லும் மாணவனுக்கு 9 ஆண்டுகள் இலவச கட்டாயக் கல்வி கொடுக்கப்படும். இதன்பின் 3 ஆண்டுகள் சிரேஷ்டநிலைக் கல்வி பயில வாய்ப்புண்டு. இது கட்டாயமில்லாவிடினும், இந்த ஆண்டில் 91% பெண்களும் 93% ஆண்களும் தொடர்ந்து கல்வி கற்பது அவதானிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

மிக முக்கியமான விடயம் என்னவென்ருல் பிரத்தியேக கல்விக் கூடங்களைக் காணவே முடியாது.

இதற்குப் பதிலாக மாணவர்கள் சாரை சாரையாக நூல் நிலையங்களுக்குச் செல்வதைக் காணக்கூடியதாயிருந்தது. ஆச்சரியமாயிருக்கிறதா? சிரேஷ்ட வகுப்பின் பின் மாணவர் பல்கலைக்கழகத்திற்கோ, தொழில் நுட்பக் கல்லூரிக்கோ, தொழிற்கல்விக்கோ செல்வர். பாரம்பரிய நவீன, சங்கீதம், நடனம் முதலியவற்றுக்கு மதிப்புக் கொடுப்பர். ஆண்கள் 'கபூக்கி' எனப்படும் நாட்டுக் கூத்தைப் போன்ற நாட்டிய நாடகத்தை நடிப்பர்.

**பொருளாதாரம்**

இவர்கள் 'யென்' எனும் நாணயத்தை உபயோகிப்பர். (இலங்கைப் பெறுமதி 1 யென் = 18 சதம்)

ஒரு பட்டதாரிக்கு 3 மில்லியன் யென், இலங்கை நாணயப்படி 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா, ஆரம்ப வேதனமாகக் கொடுக்கப்படுகிறது. என்ன அப்படியே அசந்து போய் விட்டீர்களா? அவர்கள் செலவும் அப்படித்தான். ஒரு இரவுச் சாப்பாட்டுக்கு 5000 யென் (900 ரூபா) கொடுத்தார்கள். ஒரு கைக்குட்டையின் விலை ஆகக் குறைந்தது 90 ரூபா! சம்பளம் போதுமா? யப்பானில் செய்யப்பட்டு இறக்குமதியாகும் பொருட்களை எமது



நாட்டில் ஏறத்தாள $\frac{1}{4}$, $\frac{1}{5}$ பங்கு விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். எமது பணத்தைச் செலவு செய்து உல்லாசப் பயணியாக யப்பான் செல்ல எவரும் எத்தனித்து விடாதீர்கள்.

**மொழி**

யப்பானிய மொழியில் மூன்று வித்தியாசமான பிரிவுகள் உண்டு. அதாவது ஒருவருடைய பெயரை இம்மொழியில் மூன்று முறையாக எழுதலாம். தமிழ் மொழியில் 247 எழுத்துக்கள் உள்ளதுபோல, யப்பானிய மொழிமில் 7000 குறிகள் (Characters) உண்டு. ஒவ்வொரு குறிக்கும் ஒரு கருத்துண்டு. உதாரணமாக Dha (தா) நெல்வயலைக் குறிக்கும். இது ஒரு மிகச் சிக்கலான மொழியெனவும், ஒருபிள்ளை ஏறக்குறைய 15 வயதடையும் போதுதான் ஒரு புதினத்தாளை முழுமையாக வாசித்து விளங்கக்கூடிய ஆற்றலைப் பெறுவான் என்றும் கூறுவர்.

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கும் இவர்கள், தம்மொழி மூலமாகவே ஆங்கிலத்தைக் கற்கின்றனர். இதனுல் மிகத் திறமையாக ஆங்கிலத்தை எழுதும் ஒருவர் கூட, பேசச்சிறிது தயங்குவார்.

அவர்களுடைய மொழியிலேயே சகல காரியங்களிலும் முன்னேற்றம் அடைந்தமையாலும், எம்மைப்போல் கட்டாயமாக ஆங்கிலம் கற்றேயாக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லாமையாலும் ஆங்கில மொழியில் பாண்டித்தியம் இல்லாமையை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

**வியக்கத்தக்க சில அர்சங்கள்**

1945ஆம் ஆண்டில் யப்பானில் இரு நகரங்கள் அணுக் குண்டினுல் முற்ருக அழிக்கப்பட்டன. இந்நகரங்களிலொன்ருன கிரோஷீமா (Hiroshima)வுக்கு விஜயம் செய்தபோது, 41 வருடங்களின் முன் தரை மட்டமாக்கப்பட்ட நகரம் இதுதானு என ஆச்சரியப்பட்டேன். அங்கு 'Peacc Memorial Museum' எனும் நூதனசாலையில் பாதிப்புக்குள்ளான சகலவற்றையும் தடயப் பொருளாக வைத்துள்ளார்கள்.

Super express Hikari எனும் உலகத்திலேயே இரண்டாம் அதிவேக புகையிரதத்தில் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. ஒரு மணி நேரத்தில்

240, 250 கிலோ மீற்றர் வேக முடைய இவ்வண்டியிற் செல்லும் ஒரு பிரயாணி, மிகச் சிறிய கண்ணுள்ள ஒரு ஊசியில் நூல் கூடக் கோர்க்கலாமென்முல், அவ்வண்டியிற் செல்லும் சௌகரியத்தைப் பற்றி மேலும் விபரிக்க வேண்டுமா?

Steering wheel பூட்டப்படாமலே இயங்கக்கூடிய காரைக் கூடக் கண்டுபிடித்து இயக்கத் தொடங்கி விட்டார்கள். 15 செக்கனுக்கு ஒரு கார்வீதம், ஒரு வருடத்தில் 1.3 மில்லியன் வாகனங்களை உற்பத்தி செய்கிமுர்கள் என்முல் பாருங்களேன்.

16ம் நூற்முண்டில் அமைக்கப்பட்ட ஒரு அரசனின் மாளிகைக்குள் சென்றேன். என்ன ஆச்சரியம் அடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு தடவையும் 'கீக்' என்று குருவி கீச்சிடும் சத்தம் கேட்டது. இது பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட ஒருமுறை என அறிந்ததும், புராதன காலத்திலேயே இவர்களுக்கு இருந்த விஞ்ஞான அறிவைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

Dysney land எனப்படும் டிஸ்னி தேசத்தைப் பற்றித் தொலைக்காட்சியில் அடிக்கடி பார்த்திருப்பீர்கள். அதனை நேரில் காண ஆயிரம் கண் போதாதே. வர்ணிக்க வார்த்தைகள் இல்லையே. அங்கு நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடனங்கள் சிறப்பானவை.



# இவர்களை மறப்பேனே!

சி. கந்தமூர்த்தி

கடவுள்:

காலையும் மாலையும்
கைகூப்பி வணங்கும்
கருணைக் கடலான
கணபதியை மறப்பேனே!

அம்மா:

அன்பு மடியில் வைத்து,
ஆராட்டிப் பாட்டிசைத்து
இன்பப் பாலூட்டிய
அன்னையை நான் மறப்பேனே!

அப்பா:

பள்ளிக் கனுப்பிவைத்து
பரீட்சையில் சித்திபெற்று
கல்வியில் உயரவைத்த
தந்தையை நான் மறப்பேனே!

ஆசிரியர்:

பாடம் தொடங்கிவைத்துப்
பள்ளியில் படிக்க வைத்து
பண்புகள் சொல்லித்தந்த
பழங்குருவை மறப்பேனே

அக்கா:

அன்பாக நீராட்டி
அழகான உடையுடுத்தி
இன்பக் கதைகள் சொன்ன
அக்காவை நான் மறப்பேனே!

அண்ணு:

இரவுபகல் விளையாடி
அறிவுரைகள் சொல்லி
அன்பாய் அரவணைத்த
அண்ணுவை நான் மறப்பேனே!

தம்பி:

நான்செல்லும் இடமெல்லாம்
நாய்க்குட்டி போலவந்து
தான்செல்லும் வழிகேட்ட
தம்பியைநான் மறப்பேனே!

நண்பன்:

நாளும் உடனிருந்து
நட்புறவைத் தான்வளர்த்து
நாளும் உதவிசெய்த
நண்பனைநான் மறப்பேனே!

வியத்தகு விண்வெளி

# சந்திரமண்டலம்

செல்வி தயாசிலி தியாகரசா

நிலாவைக் கண்டால் சிறுபிள்ளைகளுக்கு கொண்டாட்டம்; கவிஞர்களுக்கும் கொண் கொண்டாட்டம். நிலாவைக் காட்டித் தாய் தனது குழந்தைகளுக்கு அமுதூட்டுவது தமிழர் மரபு. தலைக்குமேல் தவழ்ந்து வரும் இந்த நிலாவைப்பற்றி — சந்திர மண்டலத்தைப் பற்றி — சிறிது அறிந்து கொள்வோம்.

### விண்வெளிப் பயணம்

1969ம் ஆண்டு ஆடி மாதத்தில் அப்பலோ — 11ல் மூன்று விண்வெளி வீரர்கள் சந்திரனுக்குச் சென்றுர்கள். இந்த அமெரிக்க வீரர்களில் "மைக்கேல் கொலின்ஸ்" என்பவர் விண்கலத்தில் சந்திரனைச் சுற்றிக் கொண்டிருக்க, அவரது தோழர்கள் "நீல் ஆம்ஸ்ரோங்"கும் "எட்வின் அல்ட்றின்"னும் விண்கலத்தைவிட்டு நீங்கி, சந்திர கலத்தில் சந்திர தரையை நோக்கி இறங்கினர். 21 – 7 – 1969ல் முதன் முதலாக நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனில் இடது காலை முதலில் வைத்து இறங்கினர். இவர்களும், பின் அப்பலோ — 12, அப்பலோ — 13 ஆகியவற்றில் சென்ற மற்றைய வீரர்களும் சந்திரனை நன்கு ஆராய்ந்தார்கள். இவர்களைப் போலவே ரஷ்ய விஞ்ஞானிகளும் மனிதனை அனுப்பாது தானுக இயங்கும் விண்கலங்களை அனுப்பி ஆராய்ந்தார்கள்.

சந்திரன் பூமியின் உபகிரகம். இதன் விட்டம் சுமார் 2100 மைல். பூமியிலிருந்து சுமார் 238,854 மைல் தூரத்தில் சந்திரன் இருக்கிறது. பூமி, சூரியனைச் சுற்றிப் பிரயாணம் செய்யும்போது சந்திரனும் பூமியோடு சேர்ந்து பூமியை வலம் வந்த வண்ணம் சூரியனையும் சுற்றுகிறது. பூமியைச் சுற்றிவர சந்திரனுக்கு சுமார் 28 நாட்கள் ஆகும். சந்ததின் தனது அச்சிலே பூமியைச் சுற்றும் கரலத்தில் தன்னையும் சுற்றுகிறது. இதனுல் தான், நாங்கள் எப்போதும் சந்திரனின் ஒரு பகுதியைக் காண நேரிடுகிறது.

### கவர்ச்சிச் சக்தி

சந்திரனின் உருவம் பூமியிலும் சிறியது. இதனுல் சந்திரனின் கவர்ச்சிச் சக்தி, பூமியினுடைய கவர்ச்சிச் சக்தியில் $\frac{1}{6}$ பங்கு ஆகும். பூமியிலே 180 இருத்தல் நிறையுடைய ஒருவன் சந்திரனில் ஆக 30 இருத்தல் நிறையுடையவனுக இருப்பான். பூமியில் அவனுக்கு இருக்கும் அதே வலிமை சந்திரனிலும் இருக்கும் என்பதால் ஓடுதல், பாய்தல் ஆகியவற்றில் அவனது திறமை பல்விதம் இருக்குமென்பதைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்.

### உஷ்ணம்

பூமியைச் சுற்றி காற்று மண்டலம் இருக்கிறது. சந்திரனில் அது கிடையாது இதனுல் உஷ்ண அளவு திடீரென அங்கு மாறுபடும். சந்திரனில் பகலில் 250$^0$F வரையில் உஷ்ணம் இருக்கும். இரவிலே இந்த உஷ்ணம் திடீரெனக் குறைந்து விடுகிறது. உஷ்ணத்தை சேமித்து வைக்க காற்றில்லை. உஷ்ணத்தை சந்திரனின் தரையை நோக்கிப் பிரதிபலிக்க மேகங்களும் இல்லை. ஆகவே இரவானதும் உஷ்ண அளவு —269$^0$F ஆகக் குறைந்து விடுகிறது.

> **பூமியிலே 180 இருத்தல் நிறையுடைய ஒருவன் சந்திரமண்டலத்தில் 30 இருத்தல் நிறையுடையவனுக இருப்பான்.**

### பள்ளங்கள்

சந்திரனின் மேற்பரப்பு பள்ளங்கள் நிறைந்தது. அவற்றுடன் விளிம்புகள், எரிமலைகள், சீற்றுக்கள் போன்ற கோடுகள், மலைகள் என்பனவும் தெரியும். தொலைநோக்கி கண்டுபிடிப்பதற்கு முன் அக்காலத்து மக்கள் சந்திரனின் இருண்ட பிரதேசங்கள் நீரினுல் நிறைந்தவை என நினைத்து அவற்றிற்கு கடல்கள் என்றும் சமுத்திரங்கள் என்றும் பெயரிட்டார்கள். ஆராய்ச்சியின் பின் சந்திரனில் ஒரு துளி

நீர்கூடக் கிடையாது என்பதை அவதானித்து அறிந்தார்கள்.

சந்திரனிலுள்ள பெரிய பள்ளங்கள் (Craters) விண்கற்களின் தாக்குத்தால் ஏற்பட்டவை. கொப்பர்னிக்கஸ், ரைக்கோ, கெப்ளர், எருடோஸ்தெனஸ் என்ற பள்ளங்கள் இவற்றுள் பிரசித்தமானவை.

சந்திரன் வளர்வதும் தேய்வதும் போலத் தோன்றுவது ஏன் என்று தெரியுமா?

அமாவாசையன்று சந்திரன் தெரிவதில்லை. நிழல் பக்க சந்திரன் பூமியை நோக்கியிருப்பது; பிரகாசமான சூரிய ஒளிக்குச் சமீபமாக சந்திரன் இருப்பது இந்த இரு காரணங்களினுலும் அன்று சந்திரன் தெரிவதில்லை

அமாவாசைக்குப் பின் 2, 3 தினங்களில், பூமியையும் சூரியனையும் இணைக்கும் நேர்கோட்டிற்கு மேலே சந்திரன் வந்துவிடுவதால், பிறை வடிவத்தில் தெரியும். மேற்கிலிருந்து கிழக்காக அது செல்லச் செல்ல சந்திரனின் பிறையும் — சூரிய வெளிச்சம் படும்பகுதியும் — பெரிதாகிக் கொண்டுபோய், கடைசியாக பௌர்ணமியன்று சந்திரனுக்கும் சூரியனுக்குமிடையில் பூமி இருக்கும்போது, சந்திரனில் சூரிய வெளிச்சம்படும். முழுப்பகுதியும் தெரியும்.

### கிரகணம்

சந்திரனே அல்லது பூமியோ சூரியனுக்கு நடுவில் நேர்கோட்டில் வரும்போது, சந்திரனின் நிழலினுல் சூரிய கிரகணமும், பூமியின் நிழலினுல் சந்திர கிரகணமும் ஏற்படுகின்றன.

★ ★ ★ ★

## புள்ளி விபர மோகம்

எதற்கும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் அமெரிக்கருக்கு தனி விருப்பம். எல்லாருக்கும் இது தெரிந்ததே.

எந்த ஒரு விஷயத்துக்கும் அபிப்பிராய வாக்கெடுப்பு அமெரிக்காவில் நடத்தப்படுகின்றது.

இப்படி நடாத்தப்பட்ட அபிப்பிராய கணக்கெடுப்பின்படி அமெரிக்கமக்களின் மனநிலையை அறிவோமா?

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றி அறிந்து 2 சதவீத மாணவர்களே முன்னுரிமை கொடுக்கின்றார்கள்.

நிக்கரகுவாவில் மெரிக்க அரசு, சான்டிஸ்ட அரசை ஆதரிக்கின்றரா அல்லது கன்டராஸ் கிளர்ச்சியாளர்க ஆதரிக்கின்றனா இது பற்றி ஒன்றுமே தெரியாத நிலையில் 87 சத வீத அமெரிக்கர் வாழ்கின்றனர்.

52 சதவீதமான அமெரிக்கர்கள் ஒரே ஒரு லட்சியத்துடன் வாழ்கின்றனர் - அந்த இலட்சியம் பணக்காரனுக வரவேண்டும் என்பதே.

45 சுதவீதமான அமெரிக்கர்கள் புத்தகங்களை வாப்பது இல்லை.

39 சதவீத மாணுேர் 8ரைப்படங்களைப் பார்ப்பது இல்லை.

விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றம் மனித இன அழிவுக்கே வழி வகுக்கப் போகின்றது என்று 47 சத வீதமான அமெரிக்கர் திடமாக நம்புகின்றனர்.

தங்கள் குழந்தைகளை அடிப்பதாக 83 சதவீத அமெரிக்பகபெற்றேர் ஒப்புக் கொள்கின்றனர்.

16 வயதுக்கு இடையில் அமெரிக்க இளைஞர்கள் 18,000 கொலை டெலிவிஷனில் பார்த்து விடுகின்றனர்.


வயது வந்த அமெரிக்கர்களில் 3 இல் 1பங்கினர் மது பாவிப்பது இல்லை.

சொர்க்க லோகத்தில் ராஜதானி ஒன்று இருப்பதை 77 சதவீத அமெரிக்கர் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை பெரும் 'அறுவை' என்று 5 சதவீத அமெரிக்கர் ஏருதுகின்றனர்.

சொர்க்கத்துக்குச் செல்லும் வாய்ப்புக்கள் நன்றுக உள்ளன என்று 69 சதவீதத்தினர் நம்புகின்றனர்.

13சதவீதமான அமெரிக்கப் பெண்கள் தாங்கள் அழகிகள் என்று இறுமாப்படைகின்றனர்: ஆனுல் 28 சதவீத ஆண்கள் தாங்கள் பெரிய அழகர்கள் என்று எண்ணிக் கொள்கின்றனர்.

-- தீபன் ராஜா



# குட்டி மாமா

இணுவையூர்-வசந்தன்

சத்தத்தைத் தொடர்ந்து மாடுகள் வெருண்டடித்தன. முன்னுக்குச் சென்ற லொறி நின்றுவிட்டது. நாணயக்கயிற்றைப் பலமாக இழுத்துப் பிடித்தபடி லொறிக்குப் பக்கத்தில் வண்டிலைக் கொண்டுவந்து நிறுத்தினார் குட்டிமாமா.

அக்கம் பக்கத்தில் நின்ற சனம் எல்லாம் என்னவோ! ஏதோ!! என்று ஏங்கியபடி ஓடிவந்துவிட்டார்கள். லொறியையும், வண்டிலையும் சுற்றிப் பெரிய சனக்கூட்டமே திரண்டுவிட்டது. குட்டிமாமாவைத் தெரிந்தவர்கள் எல்லோரும் அவரைச் சுற்றி நின்று நடந்ததை விசாரிக்கின்றார்கள்.

குட்டிமாமாவுக்குச் சத்தம் ஒன்று கேட்டதைத் தவிர என்ன நடந்தது என்றே தெரியவில்லை. லொறிச் சாரதி குனிந்து குனிந்து லொறியைப் பார்க்கின்றார். அதன் பின்புதான் லொறியின் பின்ரயர் ஒன்று வெடித்திருக்கின்றது என்று தெரிய வந்தது.

கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலையத் தொடங்கியது. குட்டிமாமாவும் சிரிப்புடன் தனக்குத் தெரிந்தவர்களுக்கு விடை சொல்லிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

அன்று ஆனி உத்திரம். வேம்படி வைரவர் கோயிலில் அவ்வூர் மக்கள் கூடி நின்றார்கள். மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, பிராமணர்கள் மந்திரம் ஓத, கோயில் மணி ஓசை எழுப்பியது. தலையில் சால்வையைக் கட்டியபடி கம்பீரமாக நின்ற குட்டிமாமா ஆனந்தக் கண்ணீர் மல்க வயிரவா! என்று சொல்லி கரங் கூப்பி நின்றார். சிவஸ்ரீ. கைலாசநாதக் குருக்கள் முதல் கல்லைத் தூக்கிக் குட்டிமாமாவிடம் கொடுத்தார். குட்டிமாமா பயபக்தியுடனும் நம்பிக்கையுடனும் முதல் கல்லை வைத்து புனருத்தாரண வேலைகளைத் தொடக்கி வைத்தார்.

**தொடர் நவீனம்**

வாழைத் தோட்டக் கந்தையர் முதலில் குட்டிமாமாவிடம் ஐந்நூறு ரூபாவை தட்டத்தில் வைத்துக் கொடுத்தார். அதைக் கையில் வாங்கியபடி நன்றிப் பெருக்குடன் கந்தையரை நிமிர்ந்து பார்த்தார். "தம்பி ஒண்டுக்கும் யோசியாதை இன்னும் ஐயாயிரம் தரத்தான் இருக்கிறன்" என்றார் கந்தையர்.

குட்டிமாமாவின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. ஒருவர் பின் ஒருவராக அவ்வூர் மக்கள் தங்களால் இயன்ற தொகையைத் தட்டத்தில் வைத்துச் சென்றனர். தட்டம் காசுத் தாள்களால் நிரம்பி நின்றது. அவ்வளவு காசை வாழ்க்கையில் அன்றுதான் முதல்முதலாகக் குட்டிமாமா கண்டிருக்கின்றார்.

தட்டத்தை அப்படியே கந்தையரிடம் கொடுத்த குட்டிமாமா தான் இருக்கும் மடத்துக்கு ஓடுகின்றார். வரும்போது ஒரு உண்டியலையும் தூக்கிக்கொண்டு வருகின்றார். எல்லோரும் அதிசயத்துடன் பார்த்துக் கொண்டு நிற்கின்றார்கள். உண்டியலைக் கொண்டுவந்த குட்டிமாமா கத்தி ஒன்றினால் அதை உடைத்தார். அது நிறையக் காசுகள் இருந்தன. அவற்றை

யும் தட்டத்தில் கொட்டினுர்.

கோயில் வாசலில் கந்தையர் பென்சனியர் சுப்பிரமணியம் வாத்தியார் நமசிவாயம் ஆகிய மூவரும் இருந்து சேர்ந்த காசுகளை எண்ணுகின்றுர்கள்.

குட்டிமாமா ஒரு மூலையில் நின்றபடி அதைப் பார்த்துக் கொண்டே நின்றுர். காசு எண்ணி முடிந்ததும் கணக்கைக் கந்தையர் சொன்னுர். ''தம்பு இருபத்துநாலாயிரத்து முன்நூறு ரூபா இருக்கு'' என்று குட்டிமாமாவைப் பார்த்துச் சொன்னுர். ''வயிரவா! எல்லாம் உன்செயல் தான்''என்று கூறியபடி குட்டிமாமா கும்பிட்டார்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் புணருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

திடீரென்று ஒரு நாள் குட்டிமாமாவுக்கு வெளிநாட்டுக் கடிதமொன்று வந்தது. மிகுந்த ஆவலுடன் அக்கடிதத்தைப் பிரித்தார். என்ன அதிசயம்! அதற்குள் கடிதத்துடன் வெளி நாட்டுக் காசோலை ஒன்றும் இருந்தது.

காசோலை ஆங்கிலத்தில் இருந்தபடியால் அதை வாசித்துத் தெரிந்து கொள்ள முடியாமல்

கடிதத்தை ஆவலுடன் படித்தார்.

''என் மதிப்புக்குரிய குட்டிமாமாவுக்கு!

அன்பான வணக்கங்கள். நீங்கள் தேக சுகத்துடன் நீண்ட நாட்கள் வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

நீங்கள் வேம்படி வயிரவருக்கு இராஜகோபுரம் கட்டும் பணியில் ஈடுபட்டிருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். அப்பணிக்காக இத்துடன் உங்கள் பெயருக்கு ஐந்நூறு டொலருக்கான வங்கி ருப்ட் அனுப்பியுள்ளேன்' யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி வெளிநாடடுக் கிளையில் மாற்றி எடுங்கள்'.

இப்படிக்கு
உங்கள் அன்புக்குப் பாத்திரமான
மு. வைரவநாதன்.

என்று கடிதத்தை வாசித்து முடித்ததும் ''வயிரவா! எல்லாம் உன்செயல்ஐயா'' என்று பெலமாகக் குட்டிமாமா கத்தியேவிட்டார்.

இந்தச் சந்தோசமான செய்தியை தனது மதிப்புக்குரியவரும், வயதில் முதிர்ந்தவருமாகிய கந்தையருக்குச் சொல்வதற்காக அவருடைய வீட்டுக்குச் சென்றுர்.

''என்ன குட்டிமாமா நானும் உன்னட்டை வர எண்டுதான் புறப்படுகிறன்; நீயும் வந்துவிட்டாய். இந்தா! நான் தாறனெண்டு சொன்ன காசு ஐயாயிரமும்'' என்று கையில் வைத்திருந்த ஐயாயிரத்தையும் குட்டிமாமாவிடம் கொடுத்தார். குட்டிமாமாவும் இரண்டு கைகளையும் நீட்டி மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார்.

''நானும் அண்ணை ஒரு சந்தோஷமான சமாச்சாரம் சொல்ல வந்தனுன். யாரோ புண்ணியவாளன் சவுதியிலிருந்து காசு அனுப்பியிருக்கிருர்.''

''அப்படியாசங்கதி! உன்ரை நல்ல மனத்துக்கு வைரவர் ஒரு குறையும் விடமாட்டார். எப்பிடி வேலைகளெல்லாம் போகுது.'' என்று கந்தையர் கேட்க ''ஏதோ ஆண்டவன் புண்ணியத்தாலை குறைவில்லாமல் நடக்குது அண்ணை'' என்றுர் குட்டிமாமா.

''அடுத்த சனிக்கிழமைஒருக்கால் சேமன் மாணிக்க நடராசர் வீட்டுப்பக்கம் போவம். அவரும் இந்த விஷயமெண்டால் பின்னிக்கமாட்டார். தாராளமாகத் தருவார்'' என்று கந்தையர் சொல்லி முடித்தார்.

அதற்குத் தலையாட்டிய குட்டிமாமா ''ஓம் அண்ணை கட்டாயம் போவம்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

வளர்மதி விளையாட்டுக் கழகத்தினர் நடாத்தும் விளையாட்டுப் போட்டி அன்று மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அவ்விளையாட்டுக் கழகத்தின் போஷகர் என்ற வகையில் சிறப்பு விருந்தினராகக் குட்டிமாமா கலந்து கொண்டார். பிரதம விருந்தினரின் உரையை அடுத்துச் சிறப்புரை வழங்கிய குட்டிமாமா பின்வருமாறு கூறினுர். ''ஆரோக்கிய வாழ்வுக்குஉடற் பயிற்சி என்றும் அவசியம். விளையாட்டுத்துறையில் எம் ஊர்ப் பிள்ளைகள் காட்டும் உற்சாகம் பாராட்டுவதற்குரியது. விளையாட்டில் நீங்கள் காட்டும் ஆர்வத்தைப்போல் கல்வியிலும் காட்டி எங்கள் கிராமத்திற்கும் நாட்டுக்கும்

பெருமை தேடித்தர வேண்டும்.''

முதல் முதல் குட்டிமாமா கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி இதுவாகும். அதனால் அன்று அவரும் உற்சாகத்துடனேயே காணப்பட்டார்.

தொடர்ந்து பொதுவிடயங்கள் பலவற்றில் பங்குபற்றி வந்தார். ஏதோ! சமுதாயத்துக்காகத் தன்னாலான சேவையைச் செய்ய வேண்டும் என்ற உணர்வு அவரில் காணக்கூடியதாக இருந்தது.

ஊர்ப்பிள்ளைகள் மேல் வகுப்புவரை படிப்பதற்காக ஒரு மகாவித்தியாலயம் தேவை என்ற குறை நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இதற்காக அவ்வூர்ப் பெரியவர்கள் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கச் சென்றிருந்தார்கள். அக்குழுவில் குட்டிமாமாவும் இடம் பெற்றிருந்தார்.

''கமக்காறற்றை பிள்ளைகள் மேற்படிப்புப் படிக்கக் கூடாது என்று நீங்கள் கருதினால் எங்கடை ஊருக்கு மகாவித்தியாலயம் வேண்டாம்'' என்று ஒரு கட்டத்தில் குட்டிமாமா கூறியே விட்டார்.

அதற்குக் கல்விப் பணிப்பாளர் ''அப்படி ஒண்டும் இல்லைப் பாருங்கோ; பிள்ளைகள் எல்லோரும் கல்வி பயில வசதி செய்து கொடுக்க வேண்டியது எமது கடமை. ஆனால் கட்டட வசதி, விளையாட்டிட வசதி, மாணவர்களின் எண்ணிக்கை, அண்மையிலுள்ள பாடசாலைகளின் நிலை என்பவற்றைக் கருத்தில் கொண்டு தான் பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாகத் தரமுயர்த்தப்படும்'' என்று கூறினார்.

''நீங்கள் கேட்கும் முதல் இரண்டும் அதாவது. கட்டடம் விளையாட்டுத்திடல் என்பன எங்களால் ஏற்படுத்தித் தர முடியும். எமது கிராமத்தில் உள்ள எண்ணூறு பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். மூன்று நான்கு மைல்களுக்கப்பால்தான் பெரிய பாடசாலைகள் இருப்பதால் இந்த விடயத்தில் உடனடியாகத் தீர்மானம் எடுத்தே தீரவேண்டும்'' என்று குட்டிமாமா வற்புறுத்தினார்.

எக்காரணத்தாலும் வேண்டுகோளைத் தட்டிக் கழிக்க முடியாத நிலையில் ''முதல் இரண்டு விடயங்களையும் செய்து முடித்துவிட்டு வாருங்கள் உங்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கின்றேன்'' என்று பணிப்பாளர் கூறி எல்லோரையும் அனுப்பி வைத்தார்.

குட்டிமாமாவுக்கு அன்று இரவு நித்திரை கொள்ளவே முடியவில்லை. பாடசாலையை மகாவித்தியாலயம் ஆக்க வேண்டும் என்ற சிந்தனையில் ஈடுபட்டு விடிய விடியச் சிந்தித்தார். விடியற்காலை தனது அன்றாட கருமங்களைச் செய்து முடித்தார். ஏதோ முக்கிய அலுவலைச் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நேராகக் கந்தையர் வீட்டுக்குச் சென்றார்.

—வளரும்

## முயன்று பாருங்கள்:

இங்கு ஒன்பது சதுரங்கள் தரப்பட்டுள்ளன. மூன்று சதுரங்கள் உங்களுக்காக நிரப்பப்பட்டுள்ளன. எல்லாச் சதுரங்களையும் பூர்த்தி செய்தால் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும் உள்ள எண்களைக் கூட்டினால் கூட்டுத்தொகை 15 ஆக அமைய வேண்டும். 1 தொட்டு 9 வரை உள்ள எண்களை ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| | | 2 |
| | 3 | |
| 1 | | |

ஆக்கம்: இன்பம்

# நேர்மைக்குக் கிடைத்த பரிசு

பொன்மொழிக்கதை

நெல்லை க. பேரன்

கிளிநொச்சியில் இருந்து அகதிகளாகிவிட்ட மீனுட்சியும் அவளது மகன் சுந்தரமும் யாழ்ப்பாணத்தில் இருந்து மினிவானில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அந்த வானில் நெல்லியடிக்குப் போவதற்காக சின்னத்தம்பி ஆசிரியரும் ஏறினுர்.வானில் ஒரே சனக்கூட்டம்.மேலேயும் பக்கங்களிலுமாக நிரம்பி வழிந்தனர்.

மழையும் மெதுவாகத் தூறிக் கொண்டிருந்தது. நெல்லியடிச் சந்தியில் சின்னத்தம்பி வாத்தியார் இறங்கினுர். அவர் அவசரமாக இறங்கும்போது சனக்கூட்டத்தில் தமது மணிபர்சைத் தவறவிட்டு விட்டார். அவரது சட்டைப் பையில் இருந்து மணிபர்ஸ் சுந்தரத்தின் அருகே விழுந்தது. சுந்தரம் அவரைக் கவனித்துக் கூப்பிடுவதற்குள் அவர் அவசரமாக இறங்கி நடக்கத் தொடங்கி விட்டார்.

சுந்தரம் தாயார் மீனுட்சியையும் இறங்கும்படி சொல்லி மழையையும் பாராது அவரைத் தொடர்ந்து ஐயா ஐயா என்று கூப்பிட்டபடி ஓடினுன். வான் புறப்பட்டுச் சென்று விட்டது. சின்னத்தம்பி ஆசிரியர், ''என்ன தம்பி! ஏன் ஓடி வருகிறுய்?'' என்று கேட்டார். ''ஐயா உங்களுடைய மணிபர்சைத் தவற விட்டு விட்டீர்கள். அது கீழே என் அருகில் விழுந்தது இந்தாருங்கள்'' என்று கொடுத்தான். ஆசிரியர் ஆச்சரியத்துடன் பர்சைத் திறந்து பார்த்தார். ஆயிரம் ரூபாய் பணமும் அவர் யாழ்ப்பாணத்தில் வாங்கிய தங்கச் சங்கிலியும் அப்படியே இருந்தன.

நேர்மையுள்ள அந்த ஏழைச் சிறுவனை மனதார மெச்சினுர். மீனுட்சியையும் சுந்தரத்தையும் தன்வீட்டிற்கு அழைத்துச் சென்றுர். சுந்தரத்தைப் பாடசாலையில் சேர்த்துத் தன் செலவில் படிக்கவைத்தார். மீனுட்சி அவரது வயது போன தாயாருக்கு உதவியாக வீட்டில் இருக்கிறுர். இருவரும் சந்தோஷமாக வாழ்கிறுர்கள். உண்மை உயர்வு தரும்.

---

## விஞ்ஞான விந்தைகள்

### மிதக்கும்விதி

- சபா. புஷ்பநாதன் -

நாம் உயிருடன் இருக்கையில் நீரில் அமிழ்ந்துவிடும் நமது உடல், இறந்தபின் மிதக்கிறது. இது ஏன் நிகழ்கிறது என நீங்கள் எண்ணியதுண்டா?

உயிருக்கு பௌதிக எடை (PHYSICAL WEIGHT) இருக்கிறதா என்ற எண்ணம் உங்களுக்கு வரலாம். ஆனுல் நீங்கள் அந்த முடிவுக்கு வரக்கூடாது. ஏதாவது ஒரு திடப் பொருள் திரவத்தில் (LIQUID) மிதக்குமாயின் அப்பொருளின் எடையும் அப்பொருளால் வெளியேற்றப்படும் (DISPLACED) திரவத்தின் எடையும் சரிசமமாக (EQUAL) இருக்க வேண்டும். திடப்பொருளால் வெளியேற்றப்படும் திரவத்தின் நிறை திடப் பொருளின் எடைக்கு குறைவானுல் அப்பொருள் நிச்சயமாக திரவத்தில் மிதக்கும். இறந்த உடல் பூரிப்பதால் அதன் கனவளவு அதிகரிக்கிறது. அதனுல் இறந்த உடல் வெளியேற்றும் நீரின் கனவளவும் அதிகரிக்கும். இந்த நீரின் எடை உடலின் நிறைக்குச் சமமாக இருக்கும் வரை உடல் நீரில் அமிழ்ந்துவிடாது. இதனை மிதத்தல் விதி விளக்குகிறது.

ஒரு இரும்புக்குண்டை நீரில் போடும் போது அது அதன் கனவளவுக்கு சமமான நீரை வெளியேற்றுகிறது. இந்த நீரின் எடை இரும்புக் குண்டின் நிறையை விட குறைந்ததாகவிருக்கும் பட்சத்தில் இரும்புக்குண்டு நீரில் மூழ்கி விடுகிறது.

# ஊமையான சின்னக் குயிலு

கண்ணன் அமைதியாக வீட்டு முற்றத்தில் இருந்து ஆகாயத்தை நோக்கிய வண்ணம் இருக்கிறுன். தூரத்தில் அவனை யொத்த சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருக்கிருர்கள். ஆடிப்பாடி விளையாடுகிருர்கள். ''கியாங் கியாங் குருவிகள்---- '' நான் கண்ணனைப் பார்க்கிறேன் அவனின் அந்த ஏக்கப் பார்வை எனக்குப் புரிகிறது.

கண்ணன் எனக்குத் தம்பி இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவனும் அவர்களுடன் விளையாடுவான். ஆடிப் பாடி விளையாடுவான். யாராவது அவனிடம் கேள்விகள் கேட்டால் இராகத்துடன் பதில் கூறுவான். பக்திப்பாடல்கள், சினிமாப் பாடல்கள் எல்லாவற்றையும் மனப்பாடம் செய்து பாடுவான். என் நண்பர்கள் அவனைக் கண்டு விட்டால் நடுவில் அமர்த்தி பாடச்சொல்லி கேட்டு ரசிப்பார்கள். கண்ணனும் தனக்கே உரிய பாணியில் பாடுவான். இதில் அவனுக்கு தனிப்பெருமை. ஏன்? எனக்குக் கூடப் பெருமையாக இருக்கும்,

கண்ணனின் இன்னெரு பொழுது போக்கு மரங்களில் ஏறுவது. வீட்டில் உள்ள மாமரம், பலாமரம் கொய்யா மரம், நாவல்மரம் இப்படி எல்லா மரங்களிலும் ஏறுவான். இவற்றில் ஏறி அதில் இருந்து பழங்களைப் பிடுங்கி சாப்பிடுவதில் அவனுக்கு ஒரு தனிப்பிரியம். இப்படிச் செய்யும் போது அடிக்கடி என் தாயிடம் ஏச்சு வேண்டுவான் சில சமயங்களில் அடிகூட வேண்டி இருக்கிறுன். ஆனல் மரங்களில் ஏறுவதை மட்டும் அவன் விடவில்லை. ஒரு நாள் மாலை நாவல் மரத்தில் ஏறினன். மகிழ்ச்சியாகப் பாடிப் பாடி ஏறினன். இதைக் கண்ட அம்மா? டேய்! கீழே இறங்கடா,'' என்று கத்தினர். கண்ணனே, ''அம்மோய்! அம்மோய்; உனக்கு சுட்ட பழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா?'' என்று தமாஷாகக் கேட்டுவிட்டு உச்சிக்கே சென்று விட்டான்.

பழங்களைப் பிடுங்கி வாயை நிரப்புவதும் பையை நிரப்புவதுமாய் இருந்த போது கைதவறி ---- மரத்தில் இருந்து கீழே விழுந்து விட்டான் தலையில் அடி அம்மா கதறுகிருர். ''ஐயோ---! நான் சொன்னதை கேட்டாயா''

கண்ணனை ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். நெற்றியில் கட்டு இடப்பட்டு கட்டிலில் படுத்து இருக்கிறுன். அவனைச் சூழ நண்பர்களும் உறவினர்களும் நிற்கிருர்கள். அம்மா கலங்கிய வாறு நிற்கிருர். டாக்டர் மௌனமாக அறையை விட்டு வெளியேறியதும் அவரைப் பின் தொடந்தேன்.'' சார்! கண்ணன்--- அடி பலமானதா டாக்டர்?'' அவர் பேசாமல் செல்கிருர். நான் மீண்டும் கண்ணனிடம் ஓடி வந்தேன். அவன் ஏதோ சொல்ல வாயைத் திறந்தான். ஆனல்---ஆனல் குரல் வரவில்லை.

ஆமாம்! இப்போது டாக்டரின் மௌனத்தைப் புரிந்து கொண்டேன். அன்று முதல் அவனல் பேசமுடிவதில்லை. அப்படி என்றல் பாடவும் முடியாது.

செல்வி இந்துமதி பரந்தாமன்
(உடுவில் மகளிர் கல்லூரி)

எடுத்ததிற்கு எல்லாம் இராகத்தோடு பாடும் அவன், இன்று ஊமையாகி விட்டான். தாய் சொல்லைத் தட்டியதால் வந்த வினை. இப்போதெல்லாம் அவன் விளையாடச் செல்வது இல்லை. ஓய்வு நேரங்களில் மரங்களின் கீழ் இருந்து வானெலியைக் கேட்டவாறு இருப்பான். இப்போதும் பெட்டியைத் திருகிறுன். அவனின் மனநிலையைப் புரிந்து கொண்டோ என்னவோ? சென்னை வானெலி நிலையத்தில் இருந்த அந்த பாட்டு ஒலி பரப்பப்படுகிறது.

என்னைப் பாடச் சொல்லாதே!
நான் ஊமையான சின்னக் குயிலு -!

# அறிவியலூட்டும் அன்புநெறி

செல்வி ஜே. சுபாஷினி
(மகாஜனா கல்லூரி தெல்லிப்பழை)



அறிவியல் சமயம் இரண்டும் ஒன்று அல்லது வேறுபட்டதா என்ற கேள்விக்கு விடை காணவேண்டில் இரண்டும் எவை பற்றிக் கூறுகின்றன என்று ஆராய்வது பொருத்தமானது. அறிவியலில் நாம் சக்தி பற்றி ஆராய்கின்றோம். சக்தி தொடர்பான மாற்றங்கள் அவற்றின் தாக்கங்கள் இவை பற்றியே ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். சமயத்திலோ சக்தியை ஆராதனை செய்தாலே போதும் அது பற்பல வேடர்களை எடுத்து நல்வழிப்படுத்தும் என்று கூறம்பட்டுள்ளது.

இருக்கு வேதகாலத்திலே மனிதன் இயற்கைச் சக்தியை இறைவன் என நம்பினான். ஒலி, ஒளி, மின், காந்தம், வெப்பம் போன்ற இச் சக்திகள் சூக்குமமானவை என நாம் அறிவோம். ஆனால் அவற்றை எமது கண்களால் காணமுடியாது. ஒளியைக் காண இயலாது.

> **கருங்கல்லில் பாலாபிஷேகம் செய்தால், அதில் இருந்து வரும் கதிர்வீச்சு கொடிய நோய்களை எதிர்க்கிறது.**

ஒளியின்றி நாம் ஏனைய பொருட்களையும் காண முடியாது. ஆனால் இறைவனின்றி எதுவும் அசையாது என்கின்றது சமயம். சக்திக்கு ஒரு வடிவம் கொடுத்து, அதன் பயனைப்பெற அதுவும் எளிதாகப் பெற வழிவகுத்துக் கொடுத்தது சமயமே.

இன்றோ அறிவியலாளர்கள் சக்தியின் ஒவ்வொருவடிவத்தையும் வெவ்வேறுவடிவங்களாக மாற்றுவதற்குக் கருவிகள் கண்டுள்ளார்கள். ஆனால் சமயத்திலே கருவியில்லாமலே பிரார்த்தனை மூலம் ஒவ்வொரு சக்தியின் பலனையும் பெற வழிவகுத்துள்ளது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

பிரஹத்தாரணிய உபநிடதத்தில் வரும் இறைவன் பற்றிய குறிப்பு ஒன்று சமயம் அறிவியல் பூர்வமானது என்பதையும், தர்க்க பூர்வமானது என்பதையும் உள்ளங்கை நெல்லிக் கனி போலத் தெட்டத்தெளிவாக எடுத்து விளக்குகின்றது. சடப்பொருட்களையும் அறிவையும் வைத்து அழகாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவை இங்கு நோக்கலாம்.

முதலில் மலையை எடுப்போம் அது அறிவற்றது; ஆனால் சடப்பொருளில் அளவு மிகக் கூடியது; முடிவில்லாதது என்று சொல்லலாம். இது முதற்படி. இரண்டாம் படியில் மரங்களை எடுப்போம் இவற்றில் இங்கு சடப்பொருளின் அளவு குறைகிறது. ஆனால் அறிவின் அளவு சிறிதளவு கூடுகின்றது. மூன்றாம் படியில் மிருகங்களை எடுப்போம். சடப்பொருள் இன்னமும் குறைகின்றது. ஆனால் அறிவு அதிகரிக்கிறது. நான்காம் படியில் மனிதன் வருகிறான் இதில் சடப்பொருள் முன்னையதிலும் குறைந்தது. அறிவு மிகக் கூடியிருக்கிறது. ஐந்தாம்படியில் சடப்பொருளே இல்லை சர்வமும் அறிவுமயம் இதுதான் இறைவன்.

சமய வாழ்வு வெறும் மூட நம்பிக்கை கொண்டது என்று வாதிடுவோருக்கு, மேற்சொன்ன கருத்து நல்ல சாட்டை அடியென்றே கூறவேண்டும். அறிவியல் வெறும் புறப்பொருட்களையும் பூதப் பொருட்களையும் ஆராயும் ஒரு வித்தையாகும். ஆனால் சமயமோ பூதப்பொருட்களையும் சூக்குமப் பொருட்களையும் சேர்த்து ஆராய்ந்து முடித்த முடிவேயாகும்.

உதாரணமாக அன்பு என்ற சூக்குமக் கருத்தை எடுத்துக் கொண்டால் தந்தை மகன் மீது வைக்கும் அன்பு என்பது மகனின் பூத உடல் மேல் வைக்கும் அன்பு அல்ல என்று தெட்டத்தெளிவாக பிரஹத் ஆரணிய உபநிடதம் கூறுகின்றது. அதேபோல் தான் மகன் தந்தை மேல்வைக்கும் அன்பும் அமைகின்றது. வெறும் பூத உடலில் மாத்திரம் அன்பு வைத்திருந்தால் இறந்துபோன தன் தந்தையின் உடலிற்கு அவன் எரியூட்டுவதை விரும்புவானு? ஆனுல் தந்தையின் ஆன்மாமேல் வைத்த அன்பினுற்றுன் தந்தை இறந்த பின்னரும் அவரது ஆத்ம ரட்சனைக்காக ஆண்டுதோறும் திவஷம் போன்றவற்றைச் சமயம் வலியுறுத்தி நிற்கின்றது. இதனுல் தான் திருமூலர் அன்பும் சிவமும் ஒன்றென்றுர் போலும். அன்புக்கு வலிமை மிக அதிகம் அது நன்மையையே செய்யும் மாபெரும் சக்தி. இதையே சமயம் வலியுறுத்துகின்றது.

அறிவியல் ரீதியாகச் சமயச் சடங்குகள் வகுக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல, சுக வாழ்வு, சுகாதாரப் பழக்க வழக்கங்கள், நோய்தீர்த்தல் போன்ற சகல விடயங்களிலும் சமயத்துடன் அறிவியல் மேதைகள் சமயம் பற்றி ஆராய்ந்தறிந்த சில உண்மைகளை நோக்கினுல் நன்கு புரியும்.

சாணியினுல் மெழுகி வீட்டை வைத்திருக்கும் பழக்கத்தை ஆராய்ந்த ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் பின்வருமாறு கூறுகிறுர். சாணி தெளித்த இடத்தில் சூரியனில் இருந்து வரும் தீங்கிழைக்கும் கொடிய ''கொங்மிக்'' கதிர் வீசல்கள் உறிஞ்சப்பட்டு அவ்விடம் சுக வாழ்விற்கு ஏற்ற இடமாக ஏதுவான ஒரு சூழலை ஆக்குகின்றது என்கிறுர். மேலும் கருங்கல்லில் பாலபிஷேகம் செய்தால் அதில் இருந்து வரும் கதிர் வீசல் கொடிய நோய்களை எதிர்க்கின்றது என்றும் அறிவியல் மேதைகள் நவீன கதிர் வீசுணர் கருவிகள் மூலம் நிரூபித்திருக்கின்றனர்.

அண்மையில் இந்தியாவில் நடந்த மிகப் பெரிய விபத்து போபால் விஷவாயு விபத்தாகும். போபாவில் ஆசிரியராகப் பணி புரிபவர் திரு. எஸ். எஸ். ''குஷ்வாஹா'' திடீரென தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்ட அவர் மனைவி திருவேணி வாந்தியெடுப்பதைப் பார்க்கிறுர். குழந்தைகளின் மூச்சுத் திணறுகின்றது. விஷவாயுவின் தாக்கம் தான் அது என்று கண்டார். இந்துமத முறைப்படி ஓமம் வளர்க்க ஆரம்பித்தார். அந்த ஆசிரியர் அவர்கள் யாவரும் பிழைத்துக் கொண்டனர். இது சமயத்தில் இரண்டறக் கலந்துவிட்ட அறிவியல் என்றுதான் கூறவேண்டும்.

மேலும் அக்கினிஹோத்திரத்தைப் பற்றி ஆராய்ந்த தற்கால அறிவியலாளர்கள், அக்கினி ஹோத்திரம் செய்யும் இடத்தில் ஒரு சக்தி மண்டலம் உருவாகிறதென்றும் அந்நிலையில் அங்கே வாழும் உயிரினங்கள் நோய்நொடி இன்றி இருப்பதையும் தாவரங்கள் செழிப்பாக வளர்கின்றன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். இவைகள் யாவும் அறிவியலும் சமயமும் இரண்டறக் கலந்ததென்பதை எமக்கு அறிவிக்கின்றன.

**உதயன் பத்திரிகை நிறுவனம் மாணவர்களுக்கு நடாத்திய அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி 1986 இல் இடைநிலைப் பிரிவில் முதலிடம்பெற்ற கட்டுரை இங்கு வெளியாகி உள்ளது.**

**சென்ற இதழில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை வெளியாகி இருந்தது. இப் போட்டியில் பரிசுபெற்ற கட்டுரைகள் அர்ச்சுனுவில் தொடர்ந்து வெளியாகும்.**

ஸ்ரீராமகிருஷ்ணர் கதையமுதம்

# சீறு, கடிக்காதே!

பாதை அருகேயுள்ள ஒரு புற்றினுட் கொடிய விஷப் பாம்பொன்று வாழ்ந்து வந்தது. பாதையால் செல்லும் வழிப்போக்கர்களையும், அயற்பக்கங்களில் வசிப்பவர்களையும் 'அப் பாம்பு' மூர்க்கத்தனமாக கடித்து வந்தது. அதனுல் பலர் இறந்த வண்ணமிருந்தனர்' பாம்பின் இக் கொடிய செயலால் மக்கள் அந்தப் புற்று இருக்கும் பாதையை நினைக்கவே அச்சமடைந்தனர்.

ஒருநாள் அவ்வழியால் ஒரு யோகி சென்ருர். அப்போது பாம்பு சீற்றத்தோடு படத்தை விரித்துக் கொண்டு அவரைக் கடிக்க ஓடியது.

யோகி பயமின்றி பாம்பைப் பார்த்தார்' தவவலிமை மிக்க அவரது பார்வையினுல் அது தனது சீற்றத்தை இழந்து அவருக்குக் கிட்டப் போகச்சக்தியில்லாது அப்படியே கிடந்தது.

யோகி பாம்பைப் பார்த்து ''என்னைக் கடிக்க வந்தாயா?'' என்ருர். பாம்பு தனது நிலையை உணர்ந்து வெட்கமடைந்தது.

''நீ இன்று தொடக்கம் ஒருவரையும் கடிக்காதே'' என்று யோகி பாம்பிற்கு கூறினுர்.

பாம்பு அவரின் வாக்கைப் பணிவோடு ஏற்றுக்கொண்டு புற்றினுள் புகுந்து சுருண்டு கிடந்தது.

அன்று முதல் பாம்பு கடிக்கின்ற தனது தீய செயலை விட்டுவிட்டது.

பாம்பு சில நாட்களாக எவரையும் கடிக்காததால் அதற்கு வயதுமுதிர்ந்து பலமிழந்து விட்டதென்றும், விஷம் இல்லாதுபோய்விட்டதென்றும் மக்கள் கருதினுர்கள்.

அது இரை தேட வெளியே வருகின்ற நேரங்களில் அவர்கள் அதனை அடித்தும், கற்களால் எறிந்தும் துன்புறுத்தினுர்கள். சிறுவர்கள் அதன் வாலில் பிடித்து இழுத்தும் தூக்கி எறிந்தும் வேடிக்கை செய்து விளையாடினுர்கள் இவ்வாறு எல்லோரும் செய்யும் துன்புறுத்தல்களைச் சகித்துக்கொண்டு அப்பாம்பு ஒரு புழுப் போலக் கிடந்தது.

உடம்பெங்கும் ஏற்பட்ட காயங்களின் வேதனை மிகுதியால் இரைதேட இயலாது அந்தப் பாம்பு பலங்குன்றிய நிலையில் புற்றினுள் கிடந்தது. ஒரு நாள் புற்றைவிட்டு வெளியே மெதுவாக ஊர்ந்து வந்தது.

அந்தப் பாம்பை முன்பு சந்தித்த யோகி அப்போது வழியால் வந்தார்.

பாம்பின் உடலில் ஏற்பட்ட காயங்களையும், அதன் மெலிந்த கோலத்தையும் அவர் கண்டார். உடனே அவர் அதைப் பார்த்து ''உனக்கு என்ன சம்பவித்தது?'' என்று கேட்டார்.

அதற்குப் பாம்பு, ''சுவாமி ஒருவருக்கும் கடிக்க வேண்டாம் என்று நீங்கள் முன்பொரு நாள் எனக்குக் கூறினீர்கள். உங்கள் போதனைப் படி நான் வாழ்ந்ததால் எனக்கு இந்தக் கதி வந்தது'' என்றது.

அதைக் கேட்ட யோகி, ''நான் மற்றவர்களைக் கடிக்காதே என்று தானே சொன்னேன். கடிப்பது போலச் சீறிப்பயமுறுத்த வேண்டாம் என்று கூறவில்லையே. இனிமேல் நீ கோபத்தோடு எல்லோரையும் கடிப்பது போலப் பயமுறுத்து. அதைக் கண்டு பயந்து ஒருவரும் உனக்குக்கிட்ட வரமாட்டார்கள்; அவர்களால் உனக்கு ஒரு துன்பமும் வரமாட்டாது'' என்ருர்.

- நவாலியூர் நடேசன் -

**மற்றவர்களுக்கு நீ தீங்குசெய்ய நினைக்காதே. அவர்கள் உனக்கு தீங்கு செய்யவும் இடமளிக்காதே. உனது மனமும், புலன்களும் முறையாகச் செயற்பட விழிப்போடு இரு.**

# கணிதப் புதிர்

96 குண்டூசிகள் சமமில்லாத மூன்று குவியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் குவியலிலும் எத்தனை ஊசிகள் இருக்கின்றதென்பது தெரியாது. இரண்டாவது குவியலில் எத்தனை ஊசிகள் உள்ளனவோ அத்தனை ஊசிகளை முதல் குவியலிலிருந்து எடுத்து இரண்டாவது குவியலில் சேர்த்துவிடுக. பின்பு மூன்றுவதுகுவியலில் எத்தனை ஊசிகள் இருக்கின்றனவோ அத்தனை ஊசிகளை இரண்டாவது குவியலிலிருந்து ஏடுத்து மூன்றுவதுடன் சேர்த்துவிடுக. முடிவில் முதலாவது குவியலில் எத்தனை ஊசிகள் இருக்கின்றனவோ அத்தனை ஊசிகளை மூன்றுவது குவியலிலிருந்து எடுத்து முதலாவதுடன் சேர்த்துவிடுக. இவ்வளவு செய்ததும் மூன்று குவியல்களிலும் ஊசிகளின் எண்ணிக்கை சமமாகிவிடுகின்றது. ஆரம்பத்தில் ஒவ்வோர் குவியலிலும் எத்தனை ஊசிகள் இருந்தன?

அசுவத்தாமன்

(விடை: அடுத்த இதழில்)

முயன்று பாருங்களேன்

## அர்ச்சுனு

### சிறுவர் வட்டம்

பாடசாலைகளில் ஆண்டு 8 ஆம் வகுப்பு வரை கல்விபயிலும் மாணவர்கள் ''அர்ச்சுனு'' சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள் மட்டுமே 'அருச்சுனு'வின் சிறுவர் வட்டப் பகுதியில் இடம்பெறும். உறுப்பினர்களாகச் சேர விருபுவோர் பின்வரும் கூப்பனை வெட்டி அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்.
'அர்ச்சுனு'' சிறுவர் வட்டம்,
அஞ்சல் பெட்டி எண்: 23,
யாழ்ப்பாணம்.

'' அர்ச்சுனு ''
சிறுவர் வட்டம்
கூப்பன்

முழுப்பெயர்;-செல்வன்/செல்வி
.................................
.................................
வகுப்பு:.........................
பாடசாலையின் பெயர்:.........
.................................
முகவரி:..........................
.................................
மாணவர்கையொப்பம்:.........
.................................
அதிபர் கையொப்பம்:.........
.................................

''அர்ச்சுனு'' இரண்டாவது இதழ் உங்கள் சரங்களில் தவழும் இவ்வேளையில் ..................! உங்களுடன் நேரிலே சந்திக்கும் ஒரு வாய்ப்புக் கிட்டியதாக நாம் உணருகின்றேம். ''அர்ச்சுனு'' பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தவருது எழுதியனுப்புங்கள். ''உங்கள் நோக்கு'' என்ற பகுதியில் அவை இடம்பெறும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

''உங்கள் நோக்கு''
அர்ச்சுனு,
அஞ்சல் பெட்டி எண்: 23
யாழ்ப்பாணம்.

# வானம்பாடியின் புதிய கீதம்

## காலில்லாத மனிதர்கள் 2

திருச்செந்தூரன்

வீதியிலே நடப்பவற்றை வானம்பாடி வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தது.

அங்கே இரண்டு சில்லுகள் பூட்டிய வண்டியொன்று வந்தது. அதன் வளைந்த ஆசனத்தில் ஒரு மனிதன் சாய்ந்துகொண்டு இருந்தான். வேறொருவன் வண்டியின் சட்டத்தைப் பற்றி இழுத்தபடி பைத்தியக்காரன் போல் ஓடிக்கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து பல மனித மாடுகள் மனிதச் சுமைகளை இழுத்துக்கொண்டு தலைதெறிக்க ஓடின.

'ஆசனத்தில் இருப்பவருக்குக் கால் இல்லைப்போலும்! இல்லாவிட்டால் அவர்கள் ஏன் நடந்துபோகவில்லை? மற்றவர்கள் ஏன் அவர்களை வண்டியில் வைத்து இழுத்துச் செல்கிறார்கள்?' என்று வானம்பாடி எண்ணியது.

வண்டியில் வைத்து இழுத்துச் செல்லப்படும் மனிதர்களுள் ஒருவனை வானம்பாடி கூர்ந்து நோக்கியது. அவனுடைய உடலின் கீழ்ப்பகுதி உயர்ந்த கம்பளிப் போர்வையால் மூடப்பட்டிருந்தது. அதற்குக் கீழே பளபளக்கும் கறுப்பு நிறத்தில் நவீன வகைச் சப்பாத்துக்கள் அணிந்த இரு கால்கள் நீட்டிக் கொண்டிருப்பதை வானம்பாடி கண்டது.

'ஓ! அவனுக்குக் கால்கள் உள்ளன! என வானம்பாடி தனக்குள்ளே கூறிக்கொண்டது.

'அப்படியானால், இன்னொருவன் ஏன் இவனை வண்டியில் வைத்து இழுத்துச் செல்கிறான்? காரியங்கள் இப்படி நடந்தால் நூறுபேரில் ஐம்பதுபேர் பயனற்றவர்கள் ஆகிவிடுவார்களல்லவா? என்று வானம்பாடி எண்ணியது. அது பலமுறை எண்ணிப் பார்த்தது. ஆனால், அதற்கு ஒன்றும் விளங்கவில்லை.

'இழுப்பவர்கள் அதனை மகிழ்ச்சியூட்டும் செயலாகக் கருதுகிறார்கள் போலும்!' என வானம்பாடி நினைத்தது.

வானம்பாடி இழுப்பவர்களைக் கூர்ந்து நோக்கியது. ஆனால், அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி தெரியவில்லை. அவர்களது சிவந்த முகத்திலிருந்து வியர்வை ஆறாக ஓடியது. அவர்கள் மேலாடையின்றி இருந்தார்கள் அவர்களின் முதுகுப்புறத்தின் வெப்பத்தை அதனால் உணரமுடிந்தது. தீக்கோழிகள் உயிர்தப்பப் பாய்ந்து பாய்ந்து ஓடுமே அதுபோல அவர்கள் முன்னோக்கி வளைந்து, கால்களை அகல வைத்துவேகமாக ஓடினார்கள். ஒரு கால் நிலத்தில் தொடுமுன் மற்றக்கால் மேலெழுந்தது.

'அவர்கள் ஏன் அவ்வளவு அவசரப்படுகிறார்கள்? அவர்கள் எங்கே போகிறார்கள்?' வானம்பாடிக்கு எதுவுமே புரியவில்லை.

வண்டி ஒன்றுக்குள் இருந்த மனிதன் தனது இடக்கையை நீட்டுவதனை வானம்பாடி கண்டது. வண்டியை இழுத்த மனிதன் உடனே தனது வேகத்தைக் குறைத்தான். சில்லுகள், ஆசனம், அதிலி

ருந்த மனிதன் ஆகிய அனைத்தையும் அவன் இடப்பக்கமாகத் திருப்பினான். சந்தியில் இடப்பக்கம் நோக்கிச் சென்ற வீதியில், தொடர்ந்து தலை தெறிக்க ஓடினான்.

'அவர்கள் பைத்தியக்காரர் போல ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பிறரின் நன்மைக்காக வியர்வை சிந்தி உழைக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் முகத்தில் புன்னகை இல்லை. அவர்கள் மகிழ்ச்சியோடு பாடுவதில்லை. அவர்களுக்கு வேலையால் மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. அவர்கள் அதனை ஆர்வத்தோடு செய்வதில்லை— என்பதெல்லாம் அப்போதுதான் வானம்பாடிக்கு விளங்கியது.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் கால்களாக வேலை செய்துகொண்டிருக்கிறான். இதனை எண்ணி அது வருந்தியது. அது கவலையால் சோகமாகப் பாடியது. அவர்கள் கதியில்லாதவர்ககள். அவர்கள் பயனும் ஆர்வமும் இல்லாமல் மற்றவர்களுக்காக துயரப்படும் மக்கள் அவர்களுக்கு அனுதாபப்படும் வகையில் அதன்பாடல் அமைந்திருந்தது.

இந்தச் சோகக் காட்சியைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க வானம்பாடியால் முடியவில்லை. அது எங்காவது சென்று ஓய்வெடுக்க விரும்பியது.

அது பறந்து சென்றது. ஒரு பெரிய வீட்டின் பச்சை நிற மேல்மாடியை அது அடைந்தது.

அங்கே பெரிய விருந்து நடந்து கொண்டிருந்தது,

(வளரும்)

# நெஞ்சில் மணக்கும் பூக்கள்

நல்ல நல்ல பூக்கள்
நறிய மென்மைப் பூக்கள்
மெல்ல மெல்ல மணக்கும்
மேன்மை யுள்ள பூக்கள்

வெள்ளை நிறப் பூக்கள்
வெட்சி முல்லைப் பூக்கள்
கொள்ளை இன்பம் நல்கும்
கோடி கோடிப் பூக்கள்

கொடிகள் தந்த பூக்கள்
கோட்டில் வளர்ந்த பூக்கள்
செடிகள் தந்த பூக்கள்
சிறந்த உயர்ந்த பூக்கள்

குளத்தில் வளர்ந்த பூக்கள்
குளிர்ந்த நல்ல பூக்கள்
வளத்தில் மிக்க பூக்கள்
வர்ண முள்ள பூக்கள்

நெஞ்சில் மணக்கும் பூக்கள்
நேசம் நிறைந்த பூக்கள்
பஞ்சைப் போன்ற பூக்கள்
பரமன் தந்த பூக்கள்

முருக வே. பரமநாதன்

# டெலிவிஷனா இல்லை "டெலிவிஷமா?"

> தொலைக்காட்சியை உருவாக்கியவர் இன்று உயிருடன் இருந்தால், அது தீமையும் பயப்பது கண்டு மனமுடைவார்.

இன்று எங்கே பார்த்தாலும், எப்போது பார்த்தாலும், எங்கே கேட்டாலும், எப்போது கேட்டாலும் தொலைக்காட்சி என்பதே பேச்சு. பொதுவாக எல்லா வீடுகளிலும் நாம் இதைப் பரவலாகக் காணலாம். சிறிது காலத்திற்கு முன்னர் தொலைக்காட்சியே விஞ்ஞானத்தின் உயர்கண்டுபிடிப்பாக இருந்தது

முதலில் நன்மைகளை எடுத்துக்கொண்டால் - தற்போது பல கல்வி சம்பந்தமான விடயங்களை தொலைக்காட்சியில் காண்பிக்கின்றனர். எனினும் குறிப்பாக விஞ்ஞான நிகழ்ச்சிகளை இதிலே காண்பிப்பதனால் இரசாயன விடயத்தில் மாற்றங்களை அறிவதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது.

மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு விடயங்களை நமக்கு படமாகவே தொலைக்காட்சி கண்முன் நிறுத்துகிறது. இதனால் பொதுவாக சில நாட்டின் எழில் அழகையும் நாட்டின் பாரம் பரியத்தையும் அந்நாட்டு ஜனாதிபதி மற்றும் பல பிரமுகர்களையும் நாம் பார்க்க கூடியதாக உள்ளது. இப்போது கணனி (கொம்பியூட்டர்) மூலமே விஞ்ஞானத்தின் பெருமை பரவியுள்ளது. இக் கணனியின் தரவுகளையும் பதிவுகளையும் நமக்கு தருவது கணனியுடன் இணைக்கப்பட்ட தொலைக்காட்சியே யாகும்.

அதுமட்டுமா? விண்வெளிக்குச் செல்பவர்களுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களை நேராகப் பார்ப்பதுபோல் பார்க்கவும் விண்வெளிக் கட்டுப்பாட்டுச் சபைக்கு உதவுவதும் இத் தொலைக்காட்சியே. இப்போது தொலைக்காட்சி உள்ள வீடுகளில் இரவு 6-30 மணிக்கு எல்லோரும் கூடுவார்கள் இவ்வாறு வீடுகளிலேயே இருந்து கொண்டு எம்மை அண்டவெளிக்கு எல்லாம் எடுத்துச் செல்கிறது இத் தொலைக்காட்சி.

இப்படியாக தொலைக்காட்சியினால் ஏற்படும் நன்மைகளைக் கூறிக்கொண்டே போகலாம். ஆனால் ஒரு குடம் பாலிற்கு ஒரு துளி விஷம் என்பது போல இத்தகைய நன்மையான விடயங்களை கொண்ட தொலைக்காட்சி ஒரு சில தீமையான விடயங்களால் பெருமை குன்றுகிறது.

தொலைக்காட்சியில் சில ஆபாசப் படங்களை காட்டுவதே அதில் உள்ள முக்கியமான குறைபாடு. இதனால் எதிர்காலத்தில் மிளிர இருக்கும் சுடர்விட்டு பிரகாசிக்க இருக்கும் நம் இளைய தலைமுறையினர் பாதிப்படைகின்றனர். அவர்கள் மனம் திருப்பப்படுகிறது. அவர்களின் எண்ணம் மாறுகிறது. எதிர்கால வீரர்களின் தொகை குன்றுகிறது. நம் இன மக்கள் அழிகின்றார்கள். நம் பாரம்பரியம் மாறுகிறது. நம் பண்பாடு அழிகிறது. நம் பெருமை குன்றுகிறது. இவ்வாறு சகல விதமாக மக்கள் பாதிப்படைகின்றனர்.

**செல்வன் பா. கேதீஸ்வரன்**
(யாழ். இந்துக்கல்லூரி)

தொலைக்காட்சியில் சில நல்ல நிகழ்ச்சிகள் ஆரம்பமாக நன்றாக நேரம் சென்றுவிடும். இதனால் மாணவர் அந்நிகழ்ச்சியையும் பார்த்துவிட்டு நித்திரை கொள்வதானால் அடுத்த நாள் அதிகாலை எழுந்து படிக்க மாட்டார்கள். இதனால் அவர்கள் படிப்பு பாதிப்படைகிறது. பின் பாடசாலையில் முதல் நாள் அவர்கள் பார்த்ததைப் பற்றியே கதைப்பார்கள். இதை ஆசிரியரும் கவனிக்காவிட்டால் மாணவரின் படிப்பு பாழாகி விடுகிறது. இதற்கெல்லாம் காரணம் அந்த நாசமாய்ப்

போன தொலைக்காட்சி என பெற்றோர்கள் திட்டுவார்கள். ஆனால் பெற்றோர் இது தம் முடைய பிழை என உணருவதில்லை.

சில வீடுகளில் பிள்ளைகளை பார்க்கவேண் டாம் என கூறிவிட்டு பெற்றோர்கள் தொலைக் காட்சி பார்ப்பார்கள். இதுவே மிகப்பெரிய குற்றம். இதனால் மனமுடைந்த பிள்ளை தான் படிக்கப் போவதாக கூறி நண்பன் வீடு சென்று தொலைக்காட்சி பார்ப்பது சர்வ சாதாரணம்.

"மனம் ஒன்றிக் கல்வி கற்றுக்கொள்" என மகாத்மா காந்தி கூறியதை மாற்றி இப்போ கல்வி கற்கும் நேரமெல்லாம் தொலைக்காட்சி பார்க்கிறார்கள் நம் மாணவர் கள்.

"ஒவ்வொரு நிமிடத்தையும் முக்கிய மானதாகக் கருதி குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்" என்ற காந்தியின் வாச கத்திற்கே கருத்தில்லையா? பொதுவாகக் கூடிய நேரம் ஒருவன் தொலைக்காட்சியே பார்க் கிறான்.

முன்னேறி வந்த நம் சமுதாயத்தை இத் தொலைக்காட்சியானது பின் இறங்க வைக்கும் போலத் தோன்றுகிறது. எது எப்படித்தான் இருந்தாலும் நன்மையான விடயங்களை எடுத்து தீமையான விடயங்களை நீக்குவதே மாண வர்களுக்குச் சிறந்தது. ஆனால் தற்போது சில இடங்களில் நிலைமை மாறிவிட்டது.

ஆனால் முழுக்குற்றம் தொலைக்காட்சியில் இல்லை. தொலைக்காட்சியை பார்க்கவிடும் பெற்றோர்களிலும் குற்றம் உண்டு. இப்போது தொலைக்காட்சியை உருவாக்கியவர் உயிருடன் இருந்தால் தான் ஆக்கிய பொருள் தீய விட யங்களுக்குப் பயன்படுவது கண்டு மனமுடை வார் என்பது நிச்சயம்.

மாணவ சமுதாயம் தாம் விடும் தவறு களை உணர்ந்து தம்மை தாமே திருத்தி வாழ வேண்டிய காலம் இது. எனவே மாணவர் கள் தொலைக்காட்சியினால் ஏற்படும் நன்மை யான விடயங்களை அறிந்து அதைத் தமக்கு பிரயோசனமான முறையில் பயன்படுத்தி நன்மை பெறுதலே சிறந்தது. தொலைக்காட்சி யினால் ஏற்படும் நன்மையான விடயங்கள் பல உண்டு. அவற்றிலே சிலவற்றையே நான் மேலே குறிப்பிட்டுள்ளேன். இத்தகைய நன் மையான விடயங்களை மாணவ சமுதாயம் எடுத்து பயன் பெற்றால் தொலைக்காட்சியின் பயன் கூடும்.

# எண் சிலம்பம்

## போட்டி இலக்கம்: 1

### பரிசு பெற்றோர் விபரம்:

**முதலாம் பரிசு:**
செல்வி ஞா. நிவேதனு
35. புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

**இரண்டாம் பரிசு:**
செல்வி ய. மெற்றீனு
32/32, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

**மூன்றும் பரிசு:**
திரு. ஜெ. ஜெகநேசன்
சித்திரமேழி,
இளவாலை.

**எண்சிலம்பம்**
**போட்டி இலக்கம்: 1**
**விடைகள்:**
**இடமிருந்து வலம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 8 | 0 | -- | 2 | 7 |
| 5 | 3 | -- | 1 | -- | 5 |
| -- | -- | 1 | 8 | 9 | - |
| 7 | 2 | 0 | -- | 2 | 5 |
| 2 | -- | 2 | 1 | 1 | - |
| 1 | 4 | 4 | -- | 6 | 3 |


* * * * * * * * * * * * * * * * * * * *

**கணிதப்புதிர்: 1**

**விடை: 21 மாங்காய்கள்**

* * * * * * * * * * * * * * * * * * * *

# கணனி நிகழ்ச்சித் திட்டம்




பாய்ச்சல் வரிப்படத்தில் MA1, MA2, MA3 எனக் குறிப்பிடப்பட்ட புலங்கள் (fields) நிகழ்ச்சித் திட்டத்தில் முறையே M, Q, P என எடுக்கப்படுகின்றன.

```
10 CLS
20 M=O : Q=O : P=O
30 PRINT "LISTEN THE QUESTION"
40 T=4
50 T=T-1
60 INPUT "DO YOU UNDERSTAND THE
   QUESTION"; YN$
70 IF YN$="Y" THEN M=M+T*10:
   GOTO 110
80 IF T>I THEN PRINT "ASK THE
   TEACHER TO EXPLAIN THE QUESTION'
   GOTO 50
   PRINT "TRY TO CONCENTRATE" :
   GOTO 240
100 CLS
110 PRINT "TRY TO ANSWER THE
    QUESTION"
120 T1=4
130 T1=T1-1
140 INPUT "ARE YOU ABLE TO ANSWER
    THE QUESTION"; AN$
150 IF AN$"Y" THEN Q=Q+T1*10:GOTO
    190
160 IF T1>1 THEN PRINT "REFER NOTES
    AND TRY AGAIN" : GOTO 130
170 PRINT "TRY TO STUDY MORE" :
    GOTO 240
180 CLS
190 PRINT ' SHOW THE ANSWER TO THE
    TEACHER"
200 CLS
210 INPUT 'IF THE ANSWER IS CORRECT';
    AN$
220 IF AN$="Y" THEN P=40 : GOTO 240
230 PRINT "LEARN THE CORRECT
    METHOD"
240 S=M+Q+P
250 PRINT "OBTAINED MARKS : " : S
260 END
```

### முயன்று பாருங்கள்

1986 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31 ஆம் திகதி உங்களுடைய வயதை வருடம், மாதம், திகதியில் கணிப்பதற்கான ஒரு கணனி நிகழ்ச்சித் திட்டம் BASIC மொழியில் எழுதியனுப்புங்கள் சரியானவற்றில் சிறந்தவை பிரசுரிக்கப்படும்.

### உங்களை அறிந்து கொள்ள

இம்முறை உங்கள் அவதானம் (Concentration) முயற்சி திறமை என்பவற்றைச் சோதித்து உங்கள் திறமைக்கேற்ப 100 புள்ளிகளுக்கு நீங்கள் பெறும் புள்ளிகள் கணிப்பதற்கான கணனி நிகழ்ச்சித்திட்டம் தரப்பட்டுள்ளது. பாய்ச்சல் வரிப்படத்தை விளங்கிய பின் நிகழ்ச்சித்திட்டத்தைக் கணணியினுள் புகுத்திச் செய்துபாருங்கள்.

# எனது செல்லப் பிராணி

ஒரு நாள் நான் அக்கா வீட்டுக்குப் போனேன். அங்கு ஒரு பூனைக்குட்டி துள்ளி விளையாடுவதைக் கண்டேன். அதைத் தரும்படி அக்காவிடம் கேட்டேன். அதனை அக்கா என்னிடம் கொடுத்தார். அந்தப் பூனைக்குட்டியை எங்கள் வீட்டுக்குக் கொண்டு போனேன். அம்மாவிடம் காட்டினேன். ''அதற்கு என்ன பெயர் வைக்கலாம்?'' என்று கேட்டேன். அம்மா அதற்கு ''துளசி'' என்று பெயர் வைக்கச் சொன்னார். துளசி எனப் பெயர் வைத்தேன். நான் அதற்குப் பால் கொடுப்பேன். அதற்குப் பால் என்றால் நல்ல விருப்பம். அது பாலைச் சுவைத்துச் சுவைத்துக் குடிக்கும். துளசி என்றவுடன் என்காலடியில் நிற்கும்.

அது அழகான பூனைக்குட்டி. வயிற்றுப் புறத்தில் வெள்ளை நிறம். மணி போன்ற கண்கள் உடம்பு மொழு மொழு என்றிருக்கும். நான் பாடசாலைக்குப் போனால் என் பின்னால் வரும். பாடசாலை விட்டு வரும்பொழுது என்னை வரவேற்கும். ஒரு இடத்தில் இருந்தால் என் மடியில் ஏறி சுருண்டு படுத்துவிடும்.

ஒருநாள் அம்மா காய்ச்சி வைத்த பாலை துளசி கள்ளத்தனமாகக் குடித்துவிட்டது. துளசிக்கு அம்மா அடித்து விட்டார். அன்று முழுவதும் நானும் துளசியும் உபவாசம் இருந்தோம். அன்றிலிருந்து யாரும் அதற்கு அடிப்பதில்லை.

நான் நித்திரை கொண்டால் துளசியும் என்னுடன் தூங்கும். ஆனால் அம்மாவுக்கோ அருவருப்பாக இருக்கும். எனககோ அருவருப்பில்லை. ஒருநாள் நான் தூங்கிவிட்டேன். அப்பொழுது என்னருகில் ஒரு பாம்பு வந்தது. அந்தத் துளசி பாம்பைக் கண்டது. பாம்பு சிறியது. துளசி கடிக்கப் போனது. அப்பொழுது நான் திடுக்கிட்டு எழுந்தேன். நான் பாம்பு பாம்பு என்று கத்தினேன். அப்பா ஓடிவந்து அதை அடித்தார். என்னை ஆபத்தில் இருந்து காப்பாற்றியது துளசி. ✱

செல்வி ச. நேசமலர்
(இளையதம்பி வித்தியாலயம், வண்ணார்பண்ணை)


# அறிவு வளர்ச்சிக்கு ஆங்கிலம்

''ஆங்கிலம் வேண்டாம் என்று யான் கூறுகிறேனில்லை. ஆங்கிலம் தற்கால உலக மொழியாக வளர்ந்து வருதலால், அதனைச் சில உலகியல் வினைகட்கும், உலகத்தோடொத்த வினைகட்கும் பயன் படுத்துவது மாண்பாகும். தமிழ்க் கல்லூரியில் ஆங்கிலம் ஒரு இஷ்ட பாடமாயிருக்கலாமென்பது எனது உட்கிடக்கை விரும்புவோர் அம்மொழியைப் பயில்வாராக அறிவு வளர்ச்சிக்கு ஆங்கிலத்துடன் இன்னும் பல நாட்டு மொழிகளையும் பயிலலாம்.''

-- தமிழறிஞர் திரு. வி. க.

ஆக்கம்:
உதங்கா

# எண் சிலம்பம்




## போட்டி இலக்கம் - 2

பெயர் செல்வன்/செல்வி..........................

..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்..........................

### இடமிருந்து வலம்

(a) $x^2 - x - 6 = 0$ என்னும் சமன்பாட்டின் நேர்மூலம்
(b) $690 \times 680 \times 25$ இன் வர்க்கமூலம்
(d) கம்பியூட்டர்களின் உபயோகிக்கும் எண் அடி.
(e) அடிபதினாறில் இதன் பெறுமதி அடிபத்தில் நூறு.
(g) நவகோணியை அடியாகக் கொண்ட கூம்பகத்தின் விளிம்புகளின் எண்ணிக்கை
(h) முதற் பத்து நேர் எண்களின் கூட்டுத் தொகை.
(j) 3 இன் 4 ஆம் வலு தலைகீழாக உள்ளது.
(k) ஒழுங்கான அறுகோணியின் சமச்சீரச்சுகள்.
(l) 152, 153 154, 158, 160, 162 என்பவற்றின் இடையம்
(n) 5 மூலகங்களைக் கொண்ட தொடையின் தொடைப் பிரிவுகள்
(o) $(a-b)\ (a+b)$ இங்கு $a=10\ b=1$
(p) ஒரு சோடியை எடுத்தால் இரு டசின்
(q) இவ்வெண்ணால் எந்தவொரு எண்ணைப் பெருக்கினும் வகுக்கினும் எண்மாறாது.
(r) $2{\cdot}8 \times 4{\cdot}3$ இரு பொருளுடைய இலக்கத்தில்
(t) 24cm, 7cm பக்கமுடைய செங்கோண முக்கோணியின் செம்பக்கத்தில் உள்ள ர த்தின் பரப்பு.

### மேலிருந்து கீழ்

(a) முக்கோணி, சதுரம், செவ்வக எண்ணாக வரும் மூதல் எண்.
(c) இவ்வெண்ணின் சுட்டி 9 ஆகும்.
(d) 140 இன் 20 சதவீதம்
(g) ஒரு ஸ்கோரில் ஒரு சோடி குறைகிறது.
(i) அடி ஆறில் இதன் பெறுமதி பத்தில் 188
(j) $(n+1)^2$ இல் $n=12$
(l) 1728 இன் கனமூலம்
(m) சிலந்திகள் கணிதம் படித்தால் இவ்வடியின் தான் கணிப்புகளைச் செய்யும்.
(n) 1 தொடக்கம் 145 வரை உள்ள 4 இன் மடங்குகள்
(p) 30cm 18cm பக்கமுள்ள செங்கோண முக்கோணியின் 3 வது பக்கம்
(q) பதினொன்றின் வர்க்கத்தில் ஒன்றுமறைந்து நிற்கிறது.
(s) $2751 \div 100$ இரு பொருளுடைய இலக்கத்தில்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்
කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ කෙරේ
**READING MAKES A MAN PERFECT**

By Courtesy: MILK WHITE SOAP WORKS, Jaffna (SRI LANKA)

★ மில்க்வைற் ★

தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி மிகச் சிறந்த அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

*Phone Office: 23187*
*Resid. 23187*

**Globe Industries**
173 (12), 4th Cross Street,
**JAFFNA.**

*Approved Paper Dealer for:*
*NATIONAL PAPER CORPORATION.*
*&*
*MANUFACTURERS OF*
*EXERCISE BOOK.*

உடுவில் மகளிர் கல்லூரி
தொடர் கல்வி நிறுவனம்

பயிற்சி நெறிகள்:

1. *Special English*
2. *N. C. E. (National Ccrtificate in English)*
3. *Stenography (Pitman London)*
4. *Home Economics*
   1. *Hair Style*
   2. *Sewing*
   3. *Cake Making*
5. *Computer Programming.*

***Director***

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்

இன்றே! வளமான எதிர் காலத்திற்கு நாடுங்கள்

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

## ஷப்ரா யுனிக்கோ (f) பினான்ஸ் லிமிட்டெட்

பதிவு காரியாலயம் :-
61. நியூ புல்லர்ஸ் வீதி
கொழும்பு -4.
தொலைபேசி: 589310, 500576

யாழ்ப்பாணம் :-
207. மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

## ஷப்ரா நிதி நிறுவனம்

வழங்கும்

மும்முக வட்டித் திட்டங்கள்

நிலையான முதலீட்டுத் திட்டம்
வைப்புச் சான்றிதழ் திட்டம்
முதலீட்டு சேமிப்பு திட்டம்

**SHABRA**®
UNICO FINANCE LIMITED

REGISTERED OFFICE
61, NEW BULLERS ROAD, COLOMBO-4
T' PHONE: 589310, 500576

207, POWER HOUSE ROAD, JAFFNA.
T' PHONE: 22073, 24805